Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 20 புதன்கிழமை (04.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 38



## புலிகளின் பகுதியில் நேற்றுமாலை கிளைமோர் தாக்குதல்
## அரசியல்துறைப் பொறுப்பாளரும் நாட்டுப்பற்றாளரும் மரணம்

### மன்னார் முள்ளிக்குளத்தில் விபரீதம்

கிளிநொச்சி, ஜன.04

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்ப் பிரதேசத்தில் நேற்று மாலை 4 மணியள வில் கிளைமோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் வவு னியா மேற்கு பிரதேச அரசியல்துறைப் பொறுப் பாளர் மேஜர் ஜெயானந்தன், நாட்டுப்பற்றாளர் தேவராஜா வினோதன் ஆகியோர் வீரச்சாவடைந் தனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதே சத்திலுள்ள முள்ளிக்குளத்தில் வளையன்காட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. மன்னார் நகரத்தில் இருந்து சுமார் 45 கிலோ மீற்றர் தொலை வில் இப்பகுதியுள்ளது.

இலங்கை இராணுவத்தினரே புலிகளின் பிர தேசத்துக்குள் நுழைந்து மோட்டார் சைக்கிளில் வந்த இந்த இருவரை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என்று கூறப் படுகின்றது.


உயிரிழந்த மேஜர் ஜெயானந்தன் ஏற்கனவே

(14ஆம் பக்கம் பார்க்க)


# ஐந்து மாணவர்களின் கொடூரக் கொலையால் திருமலை ஸ்தம்பிதம்!


## எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பீதி











திருமலை, ஜனவரி 4

**திருகோணமலையில் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டும், இரண்டு பேர் படுகாயமடைந்த சம்பவம் தமிழர் தாயகத்தின் தலைநகரில் பெரும் பதற்றத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவத்தால் திருகோணமலை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. அங்கு காலவரையறை யற்ற ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பீதி அங்கு நிலவுகின்றது.**

நேற்றுமுன்தினம் இரவு 7.20 மணியள வில் திருகோணமலை பெரிய கடற்கரை காந்தி சிலைக்கு அருகில் உள்ள நீண்ட கட்டில் இளைஞர் குழுவொன்று வழமைபோல அமர்ந் திருந்து உரையாடிக் கொண்டிருந்தது. அப் போது ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் இந்த இளைஞர்கள் மீது கைக் குண்டை வீசிவிட்டு கோட்டை வீதிப்பக்கமா

(14ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில் படையினரைத் தாக்குவதற்கு சிலர் எடுத்து வந்த கிரனேட் ஒன்று தவறுதலாக வெடித்ததில் அந்தக் கிரனேட்டை எடுத்து வந்த ஐவர் உயிரிழந்தனர் என இலங்கை இராணுவம் அறிவித்திருந்தது. அந்த ஐவரின் உயிரற்ற சடலங்களின் முகப்பகுதியே கீழே படங்களில் உள்ளன. எல்லாச் சடலங்களிலும் காதுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. (வட்டமிடப்பட்டுள்ளது)

அரச படைகளின் அறிக்கைகளின் 'உண்மைத் தன்மையை' நிரு பிக்கும் நல்ல சான்றுகள் இவை.

## காலவரையறையற்ற ஹர்த்தால் அனுஷ்டிக்க திருமலையில் அழைப்பு

திருகோணமலை, ஜன.4

திருகோணமலையில் காலவரையறையற்ற - முழுமையான - கத வடைப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு, மரவட்டப் பொங்கு தமிழ்ச் சமூகம் அழைப்பு விடுத்திருக்கிறது. (14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் மேற்கொண்ட அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜன.4

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் படையின ரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவ மானது அப்பட்டமான - மோசமான - யுத்த நிறுத்த மீறலென்று விடுத லைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ள னர்.

இது தொடர்பில் திருகோண மலை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கி றார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதா வது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மஹிந்த விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு,ஜன.4

திருகோணமலையில் நேற்று முன்தினம் இரவு தமிழ் மாணவர் கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தி உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர் னாண்டோவுக்கு உத்தரவு பிறப் பித்துள்ளார். (3)

## ஈழத்தமிழ் மக்களுக்காக தமிழ் நாட்டில் பெரும் மக்கள் போராட்டம் வெடிக்கும்

### சென்னை ஆர்ப்பாட்டத்தில் நேற்று எச்சரிக்கை

சென்னை, ஜன.4

ஈழத்து மண்ணில் சிங்கள வெறி யாட்டம் தொடர்ந்து தலைவிரித்தாடு மானால் தமிழக மக்களை ஒன்று திரட்டி போராட்டமொன்றை நடத்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தயாராகும்.

- இவ்வாறு நேற்று சூளுரைத் திருக்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் தொல். திரு மாவளவன். இலங்கை யில் தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் நடத்திவரும் கொலை வெறித் தாக்குதலைக் கண்டித்து சென்னை யில் ஞானகார்த்த மண்ட பத்தின் முன்பாக விடு தலைச் சிறுத்தைகளின் ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்தின்போது இலங்கை இராணுவத்துக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தொல் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

சிங்கள இராணுவம் தொடர்ந்து வன்முறை வெறியாட்டங்களை நடத்தி வருகிறது. அப்பாவி தமிழர் களையும், நாடாளுமன்ற உறுப்பி னர் பரராஜசிங்கம் போன்ற அரசி

(14ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் துப்பாக்கிச் சூட்டுக்கு 2 இராணுவத்தினர் காயம்!

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதி யில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு படையினர் காயமடைந்தனர். அவர் கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டனர்.

கடந்த இரு நாள்களாக ஓரளவு இயல்புக்குத் திரும்பியிருந்த யாழ். நகரம், இந்த அசம்பாவிதம் காரண

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரச படைகளின் அடாவடிச் செயற்பாடுகளால் குடாநாட்டில் இயல்புநிலை முற்றாகப் பாதிப்பு

## கஜேந்திரன் எம்.பி. கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.4

கடந்த சில தினங்களாக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டுவருகின்ற அடாவடித்தனமான செயற்பாடுகளினால் இங்கு மக்களின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தும் - இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் - தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளாலும் கைதுகள், சித்திரவதைகள் என்பவற்றாலும் மக்களின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இருபத்தைந்து பேரைப் படையினர் கைது செய்து மறைத்து வைத்துள்ளனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். டிசெம்பர் மாதம் மட்டும் இருபத்தைந்து அப்பாவிப் பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் ஐயாயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வீதிகளில் பயணம் செய்யும்போது காட்டுமிரண்டித்தனமாக அடித்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் மீது கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வடமராட்சியின் பல பகுதிகளிலும், மாதகல் பகுதியிலும் கடற்றொழிலுக்குச் செல்லவிடாது படையினர் தடுத்துள்ளதுடன், கடலுக்குச் சென்றால் சுட்டுக்கொல்லுவோம் என்றும் மிரட்டியுள்ளனர். இதனால், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும நிலை ஏற்பட்டுள்ளது.

படையினரின் இத்தகைய கெடுபிடிகளால் வருமானம் ஏதும் அற்றநிலையில் வடமராட்சி வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை கடற்கரையோரங்களில் வாழும் மீனவர்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பாக விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளுக்குச் சென்று குடியமரும் நோக்கில் தமது படகுகளையும், கட்டுமரங்களையும் எடுத்துச் செல்ல முற்பட்ட போது படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

படகுகள் கட்டுமரங்களை எடுத்துச் செல்ல முயன்றால் சுட்டுக்கொல்லுவோம் என்றும் மிரட்டியுள்ளனர்.

சுனாமியால் அனைத்தையும் இழந்த மீனவர்களுக்கு அரசு எவ்வித உதவிகளையுமே வழங்காத நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடனேயே அந்த மக்கள் படகுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறானதொரு நிலையில் படையினரின் இக்கெடுபிடியால் மீனவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளையும், ஏனைய சட்டங்களையும் மீறும் வகையில் படையினரால் மேற்கொள்ளப்படும் இக்கெடுபிடிகளை முடிவுக்குக் கொண்டுவரவும், மீனவர்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபடவும், தாம் விரும்பும் இடங்களுக்கு படகுகளை எடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்து உதவும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கோப்பாய் [illegible]சாலை மாணவர்களும் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.4

கோப்பாய் ஆசிரியகலாசாலை மாணவர்களும் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரிப்புச் செய்துள்ளனர்.

படையினரால் கடந்த 27ஆம் திகதி கைது செய்யப்பட்ட பலாலி ஆசிரியகலாசாலை ஆசிரிய மாணவனாகிய பாக்கியநாதன் கமலக்கண்ணனை விடுதலை செய்யும்படி வலியுறுத்தி பலாலி ஆசிரியகலாசாலை மாணவர்கள் அடையாள விரிவுரைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்தே கோப்பாய் ஆசிரியகலாசாலை மாணவர்களும் விரிவுரைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, பிரஸ்தாப மர்ணவனை விடுதலை செய்யக்கோரி பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். (த-6-203)

சாரதி அனுமதிப்பத்திரம்

## செயல்முறைப் பரீட்சை நாளை ஆரம்பமாகிறது

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான செயல்முறைப் பரீட்சை நாளை வியாழக்கிழமை முதல் நடைபெறவிருக்கின்றது என மோட்டார் திணைக்களப் பிரதி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தவர்கள் இச்செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றலாம் என்றும் -

செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்கள் அதற்கான திகதியை இன்று தமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த 6 வருடங்களாக யாழ்ப்பாணத் தில் மோட்டார் வாகனப் பரிசோதகராகப் பணியாற்றி வந்த ஆர்.ஏ.ரி. குலாஸ் வவுனியா மன்னார் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அவரது இடத்துக்கு கொழும்பு தலைமையகத்தில் இருந்து கே.மதிவண்ணன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர் நேற் றுத்னது கடமையைப் பொறுப்பேற்றார். (3)

## சுகாதார மீளாய்வுக் கூட்டம்

குருநகர்,ஜன.4

யாழ். மாவட்ட சுகாதார மீளாய்வுக் கூட்டம் இன்று 4ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிரதி மாகாணச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-51)

## தீவக வலய அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.4

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று நண்பகல் 12.30 மணிக்கு தீவக வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தீவக வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-14)

# தமிழ்மக்கள் மீதான அரச படைகளின் அட்டூழியத்தைக் கண்டித்துப் பேரணி !

## பரந்தனில் பெண்கள் திரண்டு கோஷம்

கிளிநொச்சியிலிருந்து சிவரூபன்

வட்டக்கச்சி,ஜன.4

யாழ். குடாநாட்டிலும் தாயகத்தின் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலும் அரச படைகளின் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள், கொலைகள், பாலியல் வன்முறைகள் என்பவற்றைக் கண்டித்து பரந்தனில் நேற்று மாபெரும்கண்டனப் பேரணி நடைபெற்றுள்ளது.

பரந்தன் பிரதேச மாதர் சங்கங்களின் ஒன்றியமும், பரந்தன் பிரதேச ஊரக மேம்பாட்டுப் பேரவையினரும் இணைந்து இக்கண்டனப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

மகளிர் அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமான பெண்களும் பொதுமக்களும் இதில் கலந்துகொண்டு இராணுவ வன்முறைக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

இப்பேரணி பரந்தன் அந்தோனியார் தேவாலய முன்றில் ஆரம்பமாகி குமரபுரம் இளைஞர் வட்ட மைதானத்தைச் சென்றடைந்தது. அங்கு மகஜர் கையளிப்பும் கண்டனக் கூட்டமும் நடைபெற்றன.

பரந்தன் பிரதேச மகளிர் அமைப்பைச் சேர்ந்த விக்டர் சாந்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வைத்து ஸ்ரீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கான மகஜரினை கண்டாவளைப் பிரதேச செயலரின் சார்பில் அங்கு வருகைதந்த நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதனிடம் பரந்தன் மாதர்சங்கத் தலைவி சி.கமலேஸ்வரி கையளித்தார்.

அதனைப் பெற்றுக்கொண்ட அவர் பிரதேச செயலருடாக உரிய இடத்திற்கு் அனுப்ப ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து பரந்தன் பிரதேச அரசியல் துறையினருக்கான மகஜரை பரந்தன் மாதர் சங்க பொருளாளர் கு.விமலாவதியும், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையினருக்கான மகஜரை உமையாள்புரம் மாதர் சங்கச் செயலாளர் கு.நகுலேஸ்வரியும், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறையினருக்கான மகஜரை குமரபுரம் மாதர் சங்கத் தலைவி உ. செல்வராஜேஸ்வரியும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கான மகஜரை விக்டர் சாந்தியும் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஒவ்சான்சன் தமது தலைமைப் பணிமனைக்கு அதனை அனுப்பி உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறினார். (த-405-352)

# தீவுப் பகுதிக்கு வாகனங்களில் பயணிப்போர் அல்லைப்பிட்டியில் 250 மீற்றர் தூரம் 'பொடிநடை'

## கடற்படையினரின் திடீர் சோதனைகளை அடுத்து

யாழ்ப்பாணம்,ஜன.4

அல்லைப்பிட்டியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் சோதனைக்கெடுபிடி காரணமாக தீவுப்பகுதிக்குச் செல்வோரும், தீவுப் பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதருவோரும் வாகனங்களிலிருந்து இறங்கி 250 மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய அவல நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

கடமை நிமித்தம் தினமும் தீவுப்பகுதிக்குச் செல்லும் பல நூற்றுக்கணக்கான அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் மற்றும் பல்வேறு தேவைகளையும் திறைவேற்றுவதற்காக தீவுப்பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் பொது மக்கள், யாழ். அஸ்பத்திரியில் சிகிச்சை பெற வரும் நோயாளிகள், கர்ப்பிணிகள் உட்பட அனைவரும் கடற்படையினரின் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையால் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதைக் காணமுடிகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப் பகுதிக்குச் செல்லும் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களும் யாழ். ஊர்காவற்றுறைப் பிரதான வீதியில் - அல்லைப்பிட்டிக்குப் பிரவேசிக்கும் பகுதியில் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பின்னர் வாகனங்களில் பயணம் செய்யும் அனைவரும் அவர்கள் கொண்டுசெல்லும் பொதிகளுடன் இறக்கப்பட்டுத் தனித்தனியாகச் சோதனையிடப்படுகின்றனர்.

சோதனைகளை அடுத்து பயணிகள் அனைவரும் சுமார் 250 மீற்றர் தூரம் - அல்லைப்பிட்டிச் சந்திவரை நடத்துசென்று அதன் பின்னரே வாகனங்களில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை - தீவுப்பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதருவோரும் மன்கும்பான் மாதா சொருபம் முன்பாக வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு தனித்தனியாகச் சோதனையிடப்படுவதுடன் அவர்கள் எடுத்து வரும் பொதிகளும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

- இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்படுவோர் பின்னர் அல்லைப்பிட்டிச் சந்தி வரைக்கும் நடந்து சென்று பயணத்தைத் தொடர்கின்றனர்.

கடற்படையினரின் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை கடமைநிமித்தம் தினமும் தீவுப் பகுதிக்குச் செல்லும் தமக்கு பெரும் சிரமத்தைத் தருகின்றது என அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் தமக்குள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

# புத்தாண்டில் முதல் தோல்வி தரங்கவின் சதம் வீணானது

கிறிஸ்சேர்ச்,ஜன.4

இலங்கை அணி புதுவருடத்தில் தனது முதலாவது தோல்வியைச் சந்தித்துள்ளது. நியூஸிலாந்து அணிக்கெதிராக நேற்று கிறிஸ்சேர்ச்சிலுள்ள யடே அரங்கில் இடம்பெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் தோல்வி அடைந்தது. உப்புல் தரங்க சதம் அடித்தபோதும் அது வீணாகிப்போனது.

அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்ட நாதன் அஸ்ரில் விளாசிய 90 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்று தொடரையும் சுவீகரித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணித் தலைவர் டானியல் வெட்டோரி வழமைபோன்றே இலங்கை அணியைத் துடுப்பெ[illegible] அழைத்தார்.

உப்புல் தரங்க[illegible] சதத்துடன் இலங்கை அணி 256 ஓட்[illegible] இழந்து பெற்றது.

இலங்கையின் ஆரம்ப ஜோடிகளாக உப்புல் தரங்கவுடன் அவிஸ்க குணவர்த்தன களமிறங்கினார். தோள்மூட்டு விலகியதன் காரணமாக நேற்றைய ஆட்டத்தில் ஜெயசூர்யா பங்கேற்கவில்லை.

சங்கக்கார 36 ஓட்டங்களுடன் 'ரன்அவுட்' ஆனார்.

அதிரடியாக ஆடிக் கொண்டி ருந்த தரங்க சதத்தைத் தொட்டார். 120 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களைக் குவித்தார் அவர். 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர் அத்தப்பத்து 52 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மில்ஸ் 44 ஓட்டங்களிற்கு இரண்டு விக்கெட்டுக்களையும், பொன்ட் 39 ஓட்டங்களிற்கு ஒரு விக்கெட்டையும், [illegible] ஓட்டங்களிற்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

256 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் நியூஸிலாந்து துடுப் பெடுத்தாடியது. 8 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கடந்தது அந்த அணி.

நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய அஸ்ரில் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களை விளாசினார்.

பந்துவீச்சில் மஹரூப் 2 விக்கெட்டுக்களையும் வாஸ், முரளி, டில்ஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அஸ்ரில் தெரிவு செய்யப்பட்டார்.

இத் தோல்வியின் மூலம் இலங்கையணி தொடரை இழந்தது மாத்திரமல்லாமல், தரவரிசையில் பின்னோக்கிச் செல்லுமென்பதால் மினி உலகக் கிண்ணப்போட்டியின் தகுதிகாண் போட்டிகளில்லாமல் விளையாடுவது சிக்கலிற்கு உள்ளாகியுள்ளது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# திருகோணமலைச் சம்பவமும் திரிப்பு வேலைப் போக்கும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வுகாண்பதில் ஆர்வம் உள்ளவர்போல சர்வதேச சமூகத்துக்குத் தம்மைக் காட்டிக் கொள்கின்றார் இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால் அவரது படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் பேட்டிகளும், செய்திகளும், நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் வேறு விதமாக இருக்கின்றன.

நடக்கும் சம்பவங்கள், அனர்த்தங்கள், அசம்பாவிதங்கள் போன்றவை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்தவின் அரசின் அதிகாரிகள் வெளியிடும் தகவல்கள், அறிக்கைகளைப் பார்க்கும்போது அவர்கள் சர்வதேச சமூகத்தையும் உலகையும் மட்டும்தான் ஏமாற்ற முயல்கிறார்களா அல்லது தமது அரசுத் தலைவரையும் கூடத் தவறாக - தமக்கு ஏற்ற வகையில் - வழி நடத்த முயல்கின்றனரா என்ற சந்தேகம் பொதுவாகவே எழுகின்றது.

மறைந்த மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டவுடன் அவரைப் புலிகளே சுட்டுக்கொன்றனர் என அரசின் கூட்டுப் படைகளின் சார்பில் - பாதுகாப்புப் பிரிவினரின் சார்பில் - விரைந்து அறிக்கை விடுக்கப்பட்டது.

அதுபோன்றுதான் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் முன்னிரவில் நடந்த அனர்த்தம் தொடர்பாக செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள், கணனி மாணவர்கள் எனத் தமிழ் இளவட்டத்தினர் கூடியிருந்து கதைத்துக் கொண்டிருந்தபோது அவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அந்த மாணவர்களை சீருடையினர் தாக்கி நிலத்தில் வீழ்த்தி, காதருகே துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொன்றிருக்கின்றனர் என்பது தமிழர் தரப்பில் தெரிந்து கொள்ளப்பட்ட உண்மை. அதிர்ச்சித் தகவல்.

ஆனால், படையினரைத் தாக்குவதற்காகக் கொண்டு வந்த குண்டு வெடித்து ஐந்து புலிகள் சாவு என்ற சாரப்பட தென்னிலங்கையில் செய்திகள் வெகு 'ஸிம்பிளாக' பரப்பப்பட்டிருக்கின்றன.

ஐந்து அப்பாவித் தமிழ மாணவர்கள் மிலேச்சத்தனமான முறையில் படுபயங்கரமாக - படுகொடூரமாக - படுகொலை செய்யப்பட, அதை எப்படித் திருப்ப முயல்கிறது தென்னிலங்கை என்று பாருங்கள்.

* அவர்கள் ஐவரும் புலிப் பயங்கரவாதிகள்.
* படையினரைத் தாக்குவதற்குக் குண்டைக் கொண்டு வந்து அதைப் பொருத்திக்கொண்டிருந்திருக்கிறார்கள்.
* அது வெடித்ததில் அவர்கள் ஐவரும் உயிரிழந்திருக்கிறார்கள்.

இதுதான் சீருடையினரின் கொடூர அடாவடித்தனத்தை மூடி மறைக்கவும் -

தென்னிலங்கைச் சிங்களவர்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றித் திசை திருப்பவும் -

வெளியிடப்பட்ட கருத்துகள், தகவல்கள், பச்சைப் புளுகுகள்.

இந்தத் திசை திருப்பல்களை நியாயப்படுத்தும் ஆதாரங்கள் குளறுபடிமுறை மூலம் சமர்ப்பிக்கப்பட்டாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை

ஆனால், தமிழர் தரப்பில் இருக்கும் கேள்வி ஒன்றுதான்.

பாதுகாப்புப் பிரிவினரின் இத்தகைய திருப்பல்கள், திரிப்புகள் எல்லாம் தென்னிலங்கைச் சிங்களவர்களையும் சர்வதேச சமூகத்தையும் மட்டும் இலக்காகக் கொண்டவையா அல்லது முப்படைகளின் தளபதியும், அரசின் தலைவரும், அமைச்சரவையின் தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவையும் தவறாக வழி நடத்துவதை இலக்காகக் கொண்டவையா என்பதுதான் அது.

இந்தியாவுடனான தமது விஜயத்தின் பெறுபேறாக தமதும், தமது அரசினதும், தமது நாட்டினதும் யதார்த்த நிலையை நன்கு உணர்ந்து கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்தர், எந்த வழியிலாவது அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் ஆக்கபூர்வ திசையில் நகர்வது ஒன்றே மிக மோசமான எதிர்காலத்திலிருந்து விடுபடுவதற்கு தமக்கும், தமது அரசுக்கும் தமது நாட்டுக்கும் உள்ள ஒரே வழி என்பதை ஐயம் திரிபற புரிந்துகொண்டிருக்கின்றார்.

ஆனால், அந்தத் திசையில் அவரை நகரவிடாது தடுக்கும் சில சக்திகள் தமது கைவரிசையைக் களத்தில் காட்டி வருகின்றன.

அத்தகைய சக்திகள் சிங்கள மக்களையும், சர்வதேச சமூகத்தையும் தமது 'கோயபல்ஸ்' பாணிப் பொய்ப் பிரசாரம் மூலம் தவறாக வழிநடத்துவது போன்று, தமது ஜனாதிபதியையும் கூட அவ்வாறு வழிநடத்தி, சமாதானத் தடத்திலிருந்து அவரை விலகவைக்கலாம், தடம் புரள வைக்கலாம் என்று நோக்கர்கள் கருதுகின்றார்கள்.

இதற்கு அப்பால் வேறு ஒருவகைக் கருத்து நிலைப்பாடும் உண்டு. ஜனாதிபதி உட்பட அரசின் மேல் மட்டத்தினரின் ஆசீர்வாதத்துடன்தான் இத்தகைய 'திரிப்பு' வேலைகள் நடந்தேறுகின்றன என்பதுதான் அது.

எது, எப்படியென்றாலும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் உண்மையை மூடி மறைத்து, பொய்யை விதைத்து, புளுகுகளை அறுவடை செய்யும் அரசுத் தரப்பின் மாயாஜாலம் நீண்ட நாளைக்குத் தாக்குப் பிடிக்காது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பர். அந்த எட்டு நாள் தாண்டும் நிலைமை இலங்கையில் வந்துவிட்டது என்பதுதான் உண்மை. பொய்யை மூடிப் புளுகை அவிழ்த்துவிடும் கொழும்பு நிர்வாகம் அதனைப் புரிந்து கொள்வது நல்லது.




கடந்த சில நாள்களாக முடங்கிக்கிடந்த யாழ். நகரம் தற்போதுதான் வழமை நிலைக்குத் திரும்பியிருந்தது. இந்தநிலையில் நேற்றுக்நண்பகல் நகரப் பகுதியில் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையடுத்து 15 நிமிடங்களிலேயே யாழ். நகரம் வெறிச்சோடியது. வெடியோசை கேட்டதையடுத்து வியாபாரிகள் உட்பட அனைவரும் மூடை, முடிச்சுகளுடன் ஓடித்தப்புவதையும் வெறிச்சோடிய யாழ். நகரத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# தமிழ்ப் பகுதிகளில் வன்முறைச் சூழலை தணிக்க இராணுவம் அகலவேண்டும்!

## பெண்களின் பாதுகாப்புக்கு அதுவே வழி என்கிறார் பத்மினி எம்.பி.

யாழ்ப்பாணம்,ஜன.4

குடியிருப்புப் பகுதிகளில் இருந்து இராணுவத்தை நீக்கினாலேயே பெண்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழல் உருவாகும்.

- இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடமராட்சி மாலு சந்திப் பகுதியைச் சேர்ந்த இரு பெண்கள் 01.01.2006 இரவு தமது வீடு இருந்த பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீட்டிற்கு வெளியில் பலர் காவலுக்கு நிற்க சிலர் வீட்டிற்குள் நுழைந்து தம் மீது பலாத்காரம் செய்ய முயற்சி செய்ததாகவும் அவ்வேளை அவர்களுடன் போராடித் தப்பித்தோம் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவில் 02.01.2006 இல் முறைப்பாடு செய்தனர். இப்பாலியல் வன்முறை முயற்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

குடாநாடு முழுவதும் அண்மைக் காலமாக இடம்பெறும் இராணுவ வன்முறை மூலம் தமிழ் மக்கள் அச்சத்துக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாகப் பெண்களும், குழந்தைகளும் பயப்பீதி நிலைக்குள்ளாக்கப்படும் ஆபத்து உருவாகியுள்ளது. மனிதாபிமானத்தில் அக்கறையுள்ள அனைவரும் இதனைக் கண்டிக்கவேண்டியது முக்கியமானது. கண்டிப்பதோடு இந்த நிலைமையை மாற்றுவதற்கு தம்மாலான அத்தனையையும் செய்யவேண்டியதும் முக்கியமானது.

புங்குடுதீவைச் சேர்ந்த தர்சினி என்ற பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தமிழ்ப் பெண்களின் மனதில் ஆழமான ஈட்டி பாய்ச்சிய ஒரு சம்பவம். அதில் இருந்து மீள முடியாமல் அவர்கள் தவிக்கின்றார்கள்.

தமிழ் சமூகத்தால் தமிழ்ப்பெண்கள் மிகவும் பக்குவமாக நோக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இத்தகைய வல்லுறவுகள், அவமதிப்புகள் இடம்பெறுவதை தமிழ் சமூகம் ஒருபோதும் பொறுத்துக் கொள்ளமாட்டது. இது தமிழ் இளைஞர்களையும் ஆத்திரமடையச் செய்து வன்முறைக்குள் தள்ளிவிடுகின்றது. இந்நிலையில் இராணுவ ஆக்கிரமிப்புக் கரங்களை மேலும் மேலும் இறுக்குவது தமிழ்ப் பெண்களை ஒருநோய் நிலைக்கும், ஒரு பழிவாங்கும் உணர்சியுடன் வேகம் கொள்வதற்கும் தள்ளிவிடும். இது கட்டுப்படுத்தப்படமுடியாத வன்முறைக்கு வழிவகுத்துவிடும். எனவே, உடனடியாக இராணுவ பிரசன்னத்தை நீக்கி மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழிவிடுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

இலங்கையில் தற்போது மீண்டும் மேற்கிளம்பிவரும் வன்முறைச் சூழலின் ஆபத்தை சர்வதேச சமூகம் கவனத்துக்கு எடுக்கவேண்டும். இந்த வன்முறைச் சூழலைத் தணிப்பதற்கு தமிழ் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து இராணுவ பிரசன்னத்தை உடனடியாக நீக்க ஸ்ரீலங்கா அரசாங்கம் முயற்சி எடுப்பதற்கு சர்வதேச சமூகம் தூண்டவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிப்பாய்க்கு புதுவருட வாழ்த்து சொன்ன நபருக்கு நேர்ந்த கதி

யாழ்ப்பாணம்,ஜன.4

படையினர் ஒருவருக்கு புத்தாண்டு வாழ்த்துக் கூறியவர் வீதியோரம் முழந்தாளில் நிற்க நேர்ந்தது. இந்தச் சம்பவம் புத்தாண்டு தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலிப் பகுதியில் ரோந்து சென்றுகொண்டிருந்த படையினருக்கு புதுவருட வாழ்த்துக் கூற அந்த வீதியில் நின்றுகொண்டிருந்த ஒருவர் விரும்பினார். நடந்துவந்துகொண்டிருந்த படையினரில் ஒருவரை அணுகிய அவர் மேற்கத்தைய பாணியில் கைலாகு கொடுத்து ஆங்கிலத்தில் புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்தார்.

பதிலுக்கு கைலாகு கொடுத்த சிப்பாய் அடுத்த வினாடியே இந்தக் கைதானே எங்கள் மீது குண்டு எறிகின்றது என்று கூறி வாழ்த்துத் தெரிவித்த நபரை வீதியோரம் முழந்தாளில் நிற்குமாறு பணித்தார்.

தாம் ரோந்து சென்று திரும்பும்வரை அந்த இடத்தைவிட்டு விலகக்கூடாது என்றும் அந்த நபரிடம் சிப்பாய் கூறியுள்ளார்.

படையினருக்குப் புதுவருட வாழ்த்துக் கூறும் தனது ஆசையை தானே நொந்து கொண்ட அந்த நபர் பின்னர் அங்கிருந்து எழுந்து சென்றார். (ஓ-7)

# திருமலைப் படுகொலைகளுக்காக பல்கலையில் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.4

திருகோணமலையில், நேற்றுமுன்தினம் இரவு படையினரால் கொல்லப்பட்ட 5 மாணவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி பல்கலைக்கழக நுழைவாயிலில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. ஒலிபெருக்கிகளில் சோககீதமும் இசைக்கவிடப்பட்டிருந்தது.

நேற்று மாணவர்களின் வரவு சற்று அதிகரித்துக் காணப்பட்டது. வெளிமாவட்ட மாணவர்களின் பெரும்பாலானவர்கள் இன்னமும் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டையடுத்து பெற்றோர் தமது பிள்ளைகளுடன் அவசர அவசரமாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகளை விசாரித்ததைக் காணமுடிந்தது. (ஓ-12)

**நாளை**

மார்கழி 21
வியாழக்கிழமை
05.01.2006
திதி: ஷஷ்டி
முன்னிரவு: 8.40வரை
நட்சத்திரம் :பூரட்டாதி
முன்னிரவு : 09.03 வரை
சுபநேரம் : 08.01 - 09.31
ராகுகாலம்: 02.01 - 03.31
(பாரம் பழைய நேரப்படி)

# அ.அட்டை இலக்கத்தை மனனம் செய்ய கன்னியாஸ்திரிக்கு வற்புறுத்தல்

வலி.மேற்கு,ஜன.4

அடையாள அட்டை இலக்கத்தை மனனம் செய்யும்படி கன்னியாஸ்திரி ஒருவரை படையினர் வற்புறுத்தினர் என்று கூறப்படுகின்றது.

முகமாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் வீதிரோந்தில் ஈடுபடுகின்ற இராணுவத்தினர் தென்பகுதியில் இருந்து வாகனங்களில் வருகின்றவர்கள் மீது கடும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பயணிகள் கூறுகின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து வாகனங்களில் வருகின்றவர்கள் முகமாலை சோதனைச் சாவடியில் சகல சோதனைகளையும் முடித்துக் கொண்டே யாழ்ப்பாணத்தை நோக்கி பிரயாணம் மேற்கொள்கின்றனர். சாவகச்சேரி, நுணாவில் போன்ற இடங்களில் வீதிச் சோதனையில் ஈடுபடுகின்ற இராணுவத்தினர். வாகனங்களை மறித்து பிரயாணிகள் மீது கடும் கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர். அண்மையில் வாகனம் ஒன்றில் பிரயாணத்தை மேற்கொண்ட கன்னியாஸ்திரி ஒருவரையும், அரச அலுவலர் ஒருவரையும் கடும் சோதனைக்குள்ளாக்கிய படையினர் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் பிறந்த திகதி ஆண்டு மாதம் ஆகியவற்றையும் அடையாள அட்டையைப் பார்க்காது தெரிவிக்குமாறு அவர்களைக் கேட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டையின் இலக்கம் தெரியாது என்று கூறிய கன்னியாஸ்திரியை இலக்கத்தை மனனம் செய்யுமாறு வற்புறுத்தியுள்ளனர். இராணுவத்தினரின் இச்செயல் ஏனைய பிரயாணிகளைப் பெரும் பீதிக்குள்ளாக்கியதுடன் விசனத்தையும் ஏற்படுத்தியதை அறியமுடிந்தது. (ஓ-175)

**உதயவாக்கு**

வாழ்வில் வெற்றிபெற எந்தவிதமான விமர்சனத்தையும் தாங்கிக் கொள்ளும் இதயம் வேண்டும். ஏனெனில் கொடுமையான பொய்கள் மௌனமாகத்தான் சொல்லப்படுகின்றன. - ஓர் அறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

WPGE XXXX எனும் தொடரிலக்கம் உடைய வீட்டுப் பாவனையில் உள்ள ஹயஸ் வான் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 4590161. (44868)

சிவப்பு நிற NPHL PULSAR (150 CC) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773526936. (44888)

ஆட்டெரு கலந்த முட்டைக் கோழி எருவும் நல்ல இன திராட்சைக் கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 52, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். 077 6544585 (44889)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 04.01.2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ்,ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை, 1ஆம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித், 517 ஸ்ரான்லி றோட், றாஜா, மாவடி, வட்டுக்கோட்டை P.ரவி, சாவகச்சேரி, T.P. 222 3529, 2222867. (44720)

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilor குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 09.01.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் கரன் - ஆலடி உடுவில், முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44845)

## ஓட்டோ விபத்தில் சாரதி காயம்!

ஓட்டோவும் லான்ட் மாஸ்ரரும் மோதியதில் தடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த சம்பவம் சங்கானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சங்கானையில் இருந்து சங்கரத்தை நோக்கி சென்றுகொண்டிருந்த ஓட்டோவுடன் எதிர்ப்புறமாக வந்த லான்ட்மாஸ்ரர் வாகனம் மோதியதில், ஓட்டோ சாரதி காயமுற்றதுடன், ஓட்டோவும் பலத்த சேதத்திற்குள்ளானது. இச்சம்பவத்தில் தியேட்டரடி, சங்கானையைச் சேர்ந்த செல்லையா காந்தன் (வயது 40) என்பவரே காயமுற்று, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-29)

## வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இந்த ஒன்றுகூடல் வைபவத்தை கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி சனிக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இக்காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக பின் போடப்பட்டது. (த-51)

### தவறிவிட்டது

அ.றஜிதன், அ.ஜசிந்தா, அ.கலைச்செல்வி ஆகியோரின் தேசிய அடையாள அட்டை இல 881262681V, 857863895V, 816022762V, ஆகியன சிறிய கைப்பையுடன் யாழ்.நகர்ப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 222 5180 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு: கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (44862)

### வாடகைக்குண்டு

மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் அல்லது வேலை பார்க்கும் இரு பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு. தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம். (44866)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broilor மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (44843)

## மரண அறிவித்தல்

### பொன்னையா சிவசுப்பிரமணியம்

*(பென்ஸ் மணியம்)*



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 02.01.2006 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் திருமதி மகேஸ்வரன் காந்திமதி அவர்களின் அன்புச் சகோதரனும் பொன்னம்பலம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் குமுதினியின் அன்புக் கணவரும் மயூரதன் (சிங்கப்பூர்), சிவசங்கரன் (கனடா), குலமகள், சிவகாந்தன், வேல்விழி (இசைத்துறை விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானசோதி (நிதி திட்டமிடல் அமைச்சு, உதவிப்பணிப்பாளர் - கொழும்பு), நந்தகீத்தா, பாலகௌரி, ஜீவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுல், சுபஹரி, சிவராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.குமுதினி
(மனைவி).

வட்டு .கிழக்கு,
சித்தன்கேணி.

(சி/47184)(32-16-15)

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
ஆரம்பம் 02,07.01.2006
Special Offer 2000/=
Free Registrations
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 Duration 4 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING Duration 4 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING Duration 4-5 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING Duration 5 Months
DIPLOMA IN WEB DESIGNING Duration 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE Duration 6 Months
DIPLOMA IN INTERNET E-MAIL Duration 2 Months
குறைந்த கட்டணம் / அங்கீகாரமுள்ள சான்றிதழ்
இலவசப் பாடநூல் / வரையறையற்ற செய்முறை
Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170,
0777846811

வாடிக்கையாளர்களே!
03.01.2006 தொடக்கம் உங்களுக்கு
சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்
"மேர்வின்ஸ் ஸ்தாபனத்தார்"
1. சில வருடங்களின் பின் மீண்டும் கண்ணைக் கவரும் நிறங்களில் விரும்பிய டிசைன்களில் ஸ்கிறீன் பிறின்ரிங் (SCREEN PRINTING) பாடசாலைச் சின்னங்கள் (SCHOOL BADGES)
2.பொலிமர் றபர்சீல்கள்
3.விரும்பிய டிசைன்களில் பெயர் போட்டுகள்
4.பிளாஸ்ரிக்கில் பெயர் பதித்தல் (ENGRAVING)
5.நம்பர் பிளேட்டுகள்
என்பவற்றைத் தரமானதாக அழகாக குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம் மேர்வின்ஸ்.
கிளை: மேர்வின்ஸ், 39,புதுச் செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
தலைமைக் காரியாலயம்: மேர்வின்ஸ், 91/1, மின்சார நிலைய வீதி (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
(44885)(42.32.16.15)

## UNIVERSITY OF JAFFNA
### FACULTY OF MEDICINE
### DEPARTMENT OF BIO CHEMISTRY
*SWEDISH INTERNATIONAL DEVELOPMENT AGENCY*

## INVITATION for BIDS
### PROCUREMENT OF COLD ROOM WORKS

The closing dates for the above have been extended as follows:

Bid forms could be obtained from the office of the Dean, Faculty of Medicine of the University of Jaffna up to - 9th January 2006

Deadline for submissin of Bids shall be 23rd **January 2006 before 10.00** hrs.

(C/47185)(42)

**Registrar.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 24 - 04 - 1921



கண்மகிழ 28 - 12 - 2003

திருமதி
### சுந்தரேஸ்வரி சபாரத்தினம்

திதி: பஞ்சமி 04.01.2006

*அன்பால் எம்மை அரவணைத்து*
*அறிவால் எம்மை உயரவைத்து*
*நன்நெறியால் வாழவழிகாட்டிய தெய்வமே!*
*உங்கள் ஆத்மா சாந்திபெற*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

8ஆம் கட்டை,
தெல்லிப்பழை. (44892)(26.32.16.15)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Direct Start
O/L பரீட்சைகளின் பின்...
1 Diploma in Microsoft Office DMO 4 months
2 Diploma in Computer Programming DCP 4 months
3 Diploma in Desktop Publishing DTP 3 months
4 Diploma in Web Design DWD 4 months
5 Diploma in Computerised Accounting DCA 3 months

Registered with Ministry of Vocational Education
மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !
▶ 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
▶ அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
▶ ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
▶ இலவச பாடப் புத்தகங்கள்
▶ Transfer Facility
▶ தவணை முறைக் கட்டணங்கள்
Free Study Packs
ICM ENGLAND Recognised Certification
புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
ASIAN COMPUTER SYSTEMS
யாழ்ப்பாணம் 2 G, ஸ்ரான்லி வீதி. Tel : 021-222 5677
சுன்னாகம் 108,K.K.S.வீதி. (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589
நெல்லியடி தொழுதாமம் வீதி நெல்லியடி Tel : 077-3122198
சாவகச்சேரி கண்டி வீதி சாவகச்சேரி. Tel : 077-3039587

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரை உற்சவ ஆருத்திரா தரிசனம் ஈழத்துச் சிதம்பரத்துக்குத் தனிச்சிறப்பு

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி மாத திருவாதிரைப் பெருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை நினைந்து உருகும் திருவெம்பாவை, மார்கழி மாதத்து பூரணையை அடுத்து வரும் திருவாதிரை நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு முதற்பத்து நாள்களும் கொண்டாடப்படுகின்றது. இவ்விழா சிவபெருமானுக்குப் பொதுவாகையால் சிறந்தாயினும் அப்பெருமானது அருள் மூர்த்தங்களுள் ஒன்றாகிய நடராஜமூர்த்திக்கு மிகவும் சிறப்புடையதாகும். கூத்தப் பிரானுக்குரிய வழிபாட்டுக் காலங்களில் திருவாதிரையே மிக விசேஷமானது. திருவாதிரை நட்சத்திரம் பன்னிரண்டு மாதங்களிலும் வருகின்ற போதிலும் மார்கழியில் வரும் திருவாதிரையே பெருஞ் சிறப்புடையது.

இந்த மார்கழி மாதம் தேவர்களுடைய நாளில் உள்ள வைகறைக் காலமாகும். அக்காலம் வழிபாட்டுக்குச் சிறந்தது. என்பதால் தேவர்கள் யாவரும் இறைவழிபாடு ஆற்றுவர். எனவே, இக்காலம் எமக்கும் விசேஷமுடையதாகின்றது. ஆதலால், மார்கழித் திங்களில் நாம் வைகறையில் துயில் நீங்கி தூய நீரில் நீராடி சமயச் சின்னங்களை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுத்துவது இன்றியமையாதது. இந்தத் தினங்கள் முழுவதும் முறைப்படி தெய்வ வழிபாட்டினை நிகழ்த்தினால் ஆண்டு முழுவதும் அவ்வாறு செய்த பலன் உண்டாகும். இந்தச் சிறப்புப் பற்றியே மார்கழி மாதம் முழுவதையும் தெய்வ வழிபாட்டிற்கென ஒதுக்கி உலகியல் நிகழ்ச்சிகளாகிய திருமணம் முதலியவற்றைத் தவிர்த்துள்ளனர் எம் முன்னோர்.

ஒவ்வொரு நாளும் வைகறையில் எழுந்து நீராடி இறைவழிபாட்டைச் செய்து முடித்தபின்னர் தமது வேலையைத் தொடங்கினால் அது இடையூறு இன்றி நன்கு முற்றுப் பெறும். அதுபோல மார்கழித் திங்களில் வழிபாடுகளை நன்கு புரிந்தால் அடுத்து வரும் உத்தராயணத்தில் செய்யப்படும் திருமணம் முதலிய செயல்களும் நன்றாக முடியும். இதுபற்றியே தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற பழமொழியும் உருவாயிற்று.

மாணிக்கவாசகர் அடிகளார் சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பல தலங்களுக்குச் சென்று திருவெண்ணாமலையை அடைந்து அங்கே தங்கியிருக்கும் பொழுது முன்பனிப் பருவத் தொடக்கமாகிய மார்கழித் திங்கள் வந்தது. அப்பொழுது திருமணம் செய்யாத கன்னிப் பெண்கள் பலர் திருவாதிரைக்கு முன் பத்து நாள் தொடங்கி அதிகாலையாகிய வைகறைப் பொழுதில் துயிலெழுந்து ஒருத்தியும் பலருமாக இல்லங்கள் தோறும் சென்று தம் தோழிகளையும் துயில் உணர்த்தி எழுப்பியதையும் - அவர்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து சிவபெருமான் திருப்புகழை வாயாரப் பாடிக்கொண்டு நீர் நிலைகளுக்குச் சென்று நீராடியதையும் உலக மாதாவாகிய பார்வதி தேவியின் திருஉருவை தூய ஈர மண்ணால் செய்து வழிபட்டுப் பொதுவுஞ் சிறப்புமாகிய பயன் வேண்டியதையும் நேரிற்கண்டு அப்பெண்கள் கூறியதாகப் பாடியருளியதாகும். இவ் உண்மையை

''மாதர்கொண் மாதரெல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்,
ஆதிரை முன்னீரைந்தே யாகிய
தினங்களெல்லாம்
மேதகு மனைகடோறும் அழைத்
திருள் விடிவதான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்
றடம் ஆடல் செய்வார்''

எனவும் -

''அன்னவ ரியல்பு கண்டார்
ஆங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம்பாவை
வாசகம் பேசி''

எனவும் திருவாதவூரடிகள் புராணம் கூறுவதில் இருந்து அறிய முடிகின்றது.

மேற்சொன்னது போன்று மார்கழி நீராடலால் விரும்பப்பட்ட பயன் பொதுவும் சிறப்புமாக இரு வகைப்படும் என்பர். பொதுப்பயன் நாடு செழிக்க மழை பெய்தல் இதனைப் பதினாறாம் திருப்பாட்டில் பராசக்தியைப் பாராட்டி மழையை முன்னிலைப்படுத்தி

''முன்னி யவன் நமக்கு முன்
சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழை
யேலோ ரெம்பாவாய்''

என்று கூறியிருத்தலால்அறியலாம். சிறப்பு பயன் கன்னியர் சிறந்த கணவரைப் பெறுதல். இதனை,

''உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ
ராவார்''

எனவும் -

''எங்கொங்கை நின்னன்ப ரல்
லாதோள் சேரற்க'' எனவும் கூறியதால் அறியலாம்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய திருவாதிரைத் திருவிழா நடேசப் பெருமானுக்குச் சிதம்பரத்தில் மிகவும் சிறப்பாக நடத்தப்படும். சிதம்பரத்தைப் போன்று காரைநகர் சிவன் கோயிலிலும் இத்திருவிழா நடத்தப்படுகின்றது. இதனாலேயே இத்தலத்தை ஈழத்துச் சிதம்பரம் என்று அடியார்கள் போற்றுகின்றார்கள்.

திருவாதிரை திருவிழா நடைபெறுகின்ற பத்து தினங்களிலும் சைவ மக்கள் அனைவரும் அவனருளாலே அவன் தாள் வணங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு எய்துகின்றனர். இங்கு தினமும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூஜை நடைபெற்ற பின் மணிவாசப் பெருமானுக்குப் பூசை நிகழும். அதன் பின் அப்பெருமானைக் கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து திருவெம்பாவை ஓதுவர். அதனைத் தொடர்ந்து சுந்தரேஸ்வரப் பெருமானும் அம்பாளும் விநாயகர், முருகன் ஆகியோருடன் இரண்டாம் வீதியில் திரு உலாவந்து அடியார்களுக்குக் காட்சி கொடுப்பார்கள். மாலையிலும் பூசையின் பின்னர் திருவெம் பாவை ஓதப்படும்.



ஒன்பதாம் நாளாகிய இரதோற்சவத்தன்று நடராசப் பெருமான் செவ்வந்திப் பூக்களினாலும் திருவாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு ஆனந்தத்தாண்டவம் ஆடிக்கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு உள்வீதியில் ஈழத்து இந்தியக் கலைஞர்களின் மேள வாத்தியத்துடன் வரும் காட்சியைக் கண்டு அடியார்கள் உள்ளமுருகி வழிபடுவார்கள். நடராசப் பெருமான் அழகிய சித்திரத் தேரிலும் ஏனைய பரிவார மூர்த்திகளுமாகப் பஞ்சரதங்களில் மூன்றாம் வீதியில் பவனிவரும் காட்சி ஆனந்தமானது; அற்புதமானது.

39 அடி உயரமான தங்கமுலாம் பூசப்பட்ட அழகிய சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய சித்திரத்தேர் இந்த ஆலயத்துக்கு மேலும் பெருமை சேர்ப்பனவாகும். தேர்த் திருவிழா அன்று இரவு பதினெட்டு நாழிகை வரையில் ஆதிரை அபிஷேகமும் அதன் மேல் சூரியோதயத்திற்கு முன் ஆருத்திரா தரிசனமும் நிகழும். இத்தலத்தில் நடக்கும் ஆருத்திரா அபிஷேகத்தின் சிறப்பை சொற்களால் வர்ணித்துவிட முடியாது.

மிகச் சிறப்பாக நடைபெறும் அபிஷேகத்தையும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டுகளிக்க ஈழத்தின் நாற்திசைகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஈழத்துச் சிதம்பரத்தில் திரளுவர்.

திருவாதிரை நாளாகிய பத்தாம் நாள் மாலை நடேசப் பெருமானுக்கும் சிவகாம சுந்தரி அம்பாளுக்கும் விசேட பூசை நடைபெற்று இரண்டாம் வீதியில் திரு உலா வருதல் திரு ஊடல், உள் வீதியில் தீர்த்தம் ஆகியன நிகழும். திருவாதிரைத் திருவிழா நாளான பத்து நாளும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக விரதமிருந்து அங்கப் பிரதட்சணம் செய்வார்கள். காவடியும் எடுப்பார்கள்.

திருவாதிரை திருவிழாக் காலத்தில் காரைநகர் மணிவாசக சபையினரால் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாச விழா மிகச் சிறப்பாக நடத்தப்படும். மாணிக்கவாசர் மடலாயத்திலும் ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையத்திலும் அன்னதானமும் இடம்பெறும்.

தொகுப்பு: **தர்ஷிகா**

# தமிழகத் தலைவர்களின் ஒருமித்த குரலால் டில்லியின் நிலைப்பாட்டில் நல்ல மாற்றம்

## ஜனாதிபதி மஹிந்தவுக்கு படுதோல்வி என்கிறார் ஈழவேந்தன் எம்.பி.

தமிழகத் தலைவர்களின் ஒருமித்த ஆதரவுக் குரலினால் டில்லியின் நிலைப்பாட்டில் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதனால்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் படுதோல்வியில் முடிந்திருக்கிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் படுதோல்வியில் முடிவுற்றுள்ளதென்று அனைத்துத் தமிழ் செய்தி இதழ்கள் வெளியிட்டுள்ள செய்தி எமக்குத் தெம்புதருகின்றது.

இதுகொண்டு அனைத்தும் இனிது முடிவுற்றுள்ளதென்று நாம் ஏமாறக் கூடாது. தமிழகத் தலைவர்களும் டில்லியில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கின்ற 40 தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் ''இடிப்பார் இலாதார் கெடும்'' என்ற வள்ளுவன் கூற்றில் முழு நம்பிக்கை வைத்து இடிக்குமேல் இடி இடித்ததன் விளைவு டில்லி அரசு ஓரளவு இறங்கி வந்து ஈழத்தமிழர் சிக்கலில் அக்கறை காட்டுகின்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.

தமிழகத்தின் தலைமைப்பீடம் ஒன்றுபட்டுக் குரலெழுப்பியிராவிடின் டில்லியில் இந்தளவு மனமாற்றம் கூட ஏற்பட்டிருக்குமா என்பது பெருங்கேள்வி.

கடந்த 27ஆம் திகதி தனது பயணத்தை டில்லிக்கு மேற்கொண்ட இவர் 30ஆம் திகதி இலங்கைக்கு கம்பராமாயண சொற்றொடரை நினைவுபடுத்துகின்ற முறையில் ''வெறுங் கையுடன் இலங்கை புக்கார்.''

தமிழக முதல்வர் ஜெயலலிதா, முன்னாள் குடியரசுத் தலைவர் சந்திரிக்காவைப் போன்று நம்பமுடியாத பேர்வழி. இவர் ''கலைஞரால் விடுதலைப் புலிகளைக் காப்பாற்ற முடியாது என்னாற்றான் புலிகளைக் காப்பாற்ற முடியும். புலிகளைக் காப்பாற்றுவது ஈழத் தமிழினத்தைக் காப்பாற்றுவதாகும்'' என்று ஒருகாலத்தில் முழங்கியவர். இது இந்தியன் எக்ஸ்பிரஷ், தினமணி,மாலைமுரசு போன்ற இதழ்களில் தலைப்புச் செய்திகளாக வெளிவந்ததை நாம் மறக்கவில்லை.

ஆனால், அண்மைக்காலத்தில் புலிகளை ஒழித்துக்கட்டுவேன். புலிகளின் தமிழக வரவு தமிழகததிற்கு ஆபத்தென்று அரசியலில் குத்துக்கரணம் அடித்தவரும் இவர்தான்.

ஈழத்துத் தமிழ் மக்களை ஒழித்துக் கட்ட கங்கணம் பூண்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவை - தமிழின ஒழிப்பில் ஜே. ஆரையும் சந்திரிக்காவையும் மிஞ்சியவர் இவர் என்றும் தமிழக மக்கள் ஒருங்கே குரல் எழுப்பி கிளர்ந்தெழுந்து எதிர்ப்புக் காட்டியதன் விளைவாக தமிழகத்தின் பக்கம் தலைசாய்க்காது தப்பினேன் பிழைத்தேன் என்று கூறி கேரளாவில் உள்ள குருபராயர் கோயிலைக் கும்பிட்டு தோல்வியை இறுகணைத்த நிலையில் திரும்பியுள்ளார்.

சொல்லியது உணர்தல் அறிஞர்க்கு அழகு சொல்வதை [illegible] தான் பயன்பெற வேண்டும் என சிங்கள வெறிக்கு அடிமையாகி இலங்கையிலே இரத்தப் பெருக்கெடுப்பிற்கு ஜனாதிபதி துணை போவாராயின் நாம் அவருக்காக இரங்குவதைத் தவிர வேறெதுவும் செய்யமுடியாது.

எம் விடுதலை வேட்கைக்கு வலுச்சேர்க்கின்ற முறையில் ஐ.நா. மன்றத்தில் தமிழீழக் கொடி பறக்கும் என்று வையம் ஏற்றும் வைகோவும், வீரத்தின் விளைநிலம் வீரமணியும், நிலைத்த கொள்கையுடன் விளங்கும் நின்றசீர் நெடுமாறனும், விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவனும் திரண்டெழுந்து தமிழகத்தில் எழுப்பிய குரல் வீண் போக முடியாது. மாறாக நிலைத்த பயனைத் தருவது உறுதி.

நெருக்கடி மிகுந்த இச்சூழலில் தமிழீழம் என்ற குழந்தையை நாம் பெறுவதில் உறுதியாக உள்ளோம். எந்த ஒரு தாயும் கொஞ்சிக் குலாவ ஒரு குழந்தை வேண்டும். அதனை நீ பெற்றுத்தா என்று வேறொரு பெண்ணைக் கேட்கமாட்டாள்.

தமிழீழம் என்ற குழந்தையை நாம்தான் பெறுவதாக உறுதி பூண்டுள்ளோம். ஆனால், தமிழகம் சிறப்பாகவும் இந்தியத் துணைக் கண்டம் பொதுவாகவும் நாம் இக்குழந்தையைப் பெறப்போகின்றபோது ஏற்படுகின்ற தொய்வை தொய்வைப் போக்க மருந்துவிச்சிகளாக மாறி எமக்குத் துணை நிற்கவேண்டும் என தமிழகத்தையும் இந்தியத் துணைக் கண்டத்தையும் நாம் வேண்டி நிற்கிறோம். மாறி வரும் இச்சூழல் எமக்கு நம்பிக்கையைத் தருகிறது.

''என்றுமே விழிப்போடு இருப்பதுதான் நாம் விடுதலைக்குக் கொடுக்கின்ற விலை'' இதுவே எமது தாரக மந்திரம்.

# மன்னாரில் மீனவர்களுக்கு கடற்படையால் தொல்லை

## அடைக்கலநாதன் எம்.பி. ஜனாதிபதிக்கு முறையீடு

யாழ்ப்பாணம்,ஜன.4

கடற்படையினரால் மன்னார் மீனவர்கள் துன்புறுத்தப்படுவது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதி மகிந்த [illegible] ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பல்வேறு நிபந்தனைகளை கடற்படையினர் மன்னார் மீனவர்களுக்கு விதித்துள்ளனர் என்றும் இதனால் அவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, கடற்படையினரின் அடாவடித்தனங்களை நிறுத்தி, மன்னார் மீனவர்கள் சுதந்திரமான முறையில் தொழில் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

(த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு
## டோகா, கட்டார், டுபாய்

- பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)
- களஞ்சியப் பாதுகாவலர் (STORE KEEPER)
- சமையல் செய்பவர் (COOK ASIAN / SOUTH INDIAN)
- இலக்ரீசியன் (HOUSE ELECTRICANS)
- துப்புரவு செய்பவர்கள் (CLEANING LABOURERS)

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

- மரத்தளபாடம் செய்பவர்கள்
- உதிரிப்பாக உற்பத்தியாளர்கள்
- உற்பத்தி இயக்குநர்கள்
- துப்புரவுத் தொழிலாளர்கள்
- தையல் வேலை செய்பவர்கள்

மேற் குறிப்பிட்ட நாடுகளுக்கு குறுகிய காலத்தில் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**RAINBOW TRAVELS & TOURS**

32-1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2237 , 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)

குறிப்பு:- எமது ஸ்தாபனம் கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகின்றது.



எமது மாணவர்களின் சென்ற வருட பெறுபேறே கலை, வர்த்தக வகுப்புகளுக்கு அதிகூடிய மாணவர்களைக் கொண்ட நிறுவனம் என்பதற்குச் சான்றாகும்.

## விக்னா கல்வி நிறுவனம்
## A/L 2008

நாள் வகுப்பு ஆரம்பம்: 05.01.2006 (8.00)

| | |
|---|---|
| கணக்கீடு<br>திரு.பாலவாசன் | பொருளியல்<br>உதயன் |
| வணிகக் கல்வி பிரிவு 1<br>யசோ | வணிகக் கல்வி பிரிவு 2<br>முரளி |
| அளவையியல்<br>சயந்தன் | தமிழ் பிரிவு 1<br>குழந்தை |
| தமிழ் பிரிவு 11<br>லிங்கம் | இந்துநாகரிகம்<br>பத்மராஜா |
| புவியியல்<br>பாபு | இந்துசமயம்<br>N.T.தரன் |
| அரசியல்<br>ஸ்ரீரங்கநாத் | கிறிஸ்தவம்<br>வசந்தன் |
| வரலாறு<br>பத்மன் | நாடகமும் அரங்கியலும்<br>ரமேஷ் |

வழமைபோல் 7ஆம் திகதி (சனி) வகுப்பு நடைபெறும். (8 மணி)

(சி/47157) எமது நிறுவனத்தில் கல்வி கற்ற O/L மாணவர்களுக்கு
(24-3411-21) அனுமதிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.


# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 21 - 06 - 1994



மறைவு 21 - 11 - 2005

செல்வன் **சோ.இராகவன்**

(யா/ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

வேரோடு எம்மைச் சாய்த்து
வெந்தழலில் வேகவைத்த
முதல் முத்தே முழுமதியே நீ எங்கே....?

அன்னாரின் மரணச் செய்தியறிந்து எம்துயரில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், மலர் வளையம் சாற்றியோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (05.01.2006) வியாழக் கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் அழைக்கிறோம்.

தந்தை : நா.சோதிலிங்கம்
தாய் : சோ.கெங்காதேவி

புலோலி மத்தி,
பருத்தித்துறை. (44861)(21.11.34)

# அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.4

கண்டியில் பத்திரிகையாளர்கள் மீது ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் வன்மையாக நடந்துகொண்ட விவகாரம் தொடர்பாக முழுமையான அறிக்கை ஒன்றைப் பெற்றுத் தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஊடகப்பிரிவின் பணிப்பாளருக்கு நேற்றுமுன்தினம் அவசர உத்தரவு ஒன்றை விடுத்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குப் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்காக சென்றிருந்தார். இந்த நிகழ்வு தொடர்பான செய்திகளைப் பெறுவதற்குத் தலதா மாளிகை வளவில் திரண்டிருந்த செய்தியாளர்கள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளின் சுடுசொற்களுக்கு ஆளாகியதுடன் அங்கிருந்து வெளியேறுமாறும் பணிக்கப்பட்டனர்.

இந்த விடயம் ஊடகங்களில் வெளிவந்ததையடுத்து ஆத்திரமுற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இதுபற்றிய விசாரணைகளை மேற்கொண்டு உடனடியாக அறிக்கை தருமாறு தனது ஊடகப் பணிப்பாளரைப் பணித்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி வருத்தம் தெரிவித்திருக்கிறார் என ஜனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் சந்திரபால லியனகே தெரிவித்தார். (க)

## எழுத்தாளர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல எழுத்தாளர்களுக்குமான சந்திப்பு ஒன்று இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ். பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தமிழ் செய்தி தகவல் மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து எழுத்தாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தகவல் மையத்தின் இணைப்பாளர் ஜெ.பாரதி கேட்டுள்ளார். (த-13)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 10 - 12 - 1975



ஆண்டவன் அடியில் 16 - 12 - 2004

அமரர் **செல்வராசா மணிவண்ணன்**

(கிளை முகாமையாளர் - நெடுங்கேணி)

சந்ததிக்கு ஒரு மகனாய்
ஆனந்தமாய் வந்தவனே - காலத்தால்
அழியாது உன் வாழ்வென்றிருந்த வேளை
அழைத்துச் சென்றான் காலன் அவன்
- கணப்பொழுதில்
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
அஞ்சுகிறது நெஞ்சம் மணிவண்ணா - நீ
இல்லை என்று சொல்ல!

43/1, மணல்தறை லேன்,
கந்தர்மடம். (44850)(21.11.34)

தாய் மற்றும் குடும்பத்தினர்.


யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Assembling ♦ Upgrading ♦Troubleshooting ♦Fault Finding ♦ Repairing ♦Servicing ♦Software Installation ♦Configuring ♦Introduction to Networking

நன்மைகள்

- ❖ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- ❖ PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- ❖ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.
- ❖ தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகிறது.

*Course Contents*

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD

*Hard ware பயிற்சி*

- ❖ கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- ❖ Assembling
- ❖ BIOS Configurations (முறைப்படுத்தல்)
- ❖ Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- ❖ Network தொடர்பான அறிமுகம்
- ❖ Troubule Shooting / Maintenance.

*Software பயிற்சி*

- ❖ Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- ❖ Software Install செய்யும் முறை
- ❖ Driver Installation செய்யும் முறை (Sound Card, Modam, VGA, TV Card, Printer)
- ❖ Troubule Shooting (File updating, Copying)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
09/01/2006 :- 08.30-4.00

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
(off Stanly Rd.)
021-222 8250, 077 7 222422

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுண்டிக்குளம் பகுதியில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தோர் நினைவாகப் பிரார்த்தனை

## கல்லாறுக் கிராமத்தில் நடந்தது

பரந்தன்,ஜன.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது சுண்டிக்குளம் பகுதியில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக இறைபிரார்த்தனை நிகழ்வு கடந்த 26ஆம் திகதி கல்லாறுக் கிராமத்தில் நடைபெற்றது.

கண்டாவளைப் பிரதேச செயலர் கி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரைக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடு பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் மு. சோழநிலவன் ஏற்றினார்.

ஈகச்சுடர்களை சிவஸ்ரீ சிவலோகநாதக் குருக்கள், அருட்தந்தை ரவிராஜ் அடிகளார் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து ஆழிப்பேரலையால் சுண்டிக்குளம் பகுதியில் உயிரிழந்த 33 பேரின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு இறை பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது. உறவினர்களால் தொடர்ந்து ஈகச் சுடரேற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவுரைகளைக் கடற்புலிகளின் வடமராட்சி அரசியல் துறையைச் சேர்ந்த அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், சமயத்தலைவர்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையினை தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த புலிமறவன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக மேலதிக அரசஅதிபர் நா.வேதநாயகர், தமிழீழ நிர்வாக சேவை கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் இசையமுதன், துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-352-204)

# சிறுவர்களுக்கு விளையாட்டு நிகழ்வு

விசுவமடு,ஜன.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள 18வயதிற்குட்பட்ட சிறுவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினரால் 'சிறுவர்களை மகிழ்வித்தல்' என்ற தலைப்பில் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சகல இடைத்தங்கல் முகாம்களிலும் கடந்த 28ஆம் திகதி இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இவ்வாறான செயற்பாடுகளால் சிறுவர்கள் உளத்தாக்கங்களில் இருந்து விடுபடமுடியும் எனவும் அவர்கள் சுயமாகச் செயற்படத் தொடங்குவார்கள் என்றும் இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வின் முடிவில் சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (த-402-203)

# மடு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வசதி இல்லை

## இதனால் நோயாளர்கள் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஜன.4

மடு வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்வதற்கு 'அம்புலன்ஸ்' இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

மடு, தட்சணாமருதமடு, பண்டிவிரிச்சான், பாலம்பிட்டி, முள்ளிக்குளம், பரசன்குளம், பெரியமடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் மடு மருத்துவமனையிலேயே சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மடு மருத்துவமனைக்கு இதுவரையில் 'அம்புலன்ஸ்' வண்டி வழங்கப்படவில்லை.

நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளைப் பெறுவதற்கு மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமாயின் தனியார் வாகனங்கள் மூலமோ அல்லது மன்னார் வைத்தியசாலையில் இருந்து வாகனங்கள் வரவழைக்கப்பட்டேதான் அங்கு செல்லவேண்டிய நிலைமையுள்ளது. (த-341-203)

# பளை தொழில்நுட்ப நிலையத்தில் தொழிற்பயிற்சி நிறைவு நிகழ்வு

வட்டக்கச்சி,ஜன.4

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் பளைப் பிராந்திய நிலையத்தில் தொழிற்பயிற்சி பெறுபவர்களின் பயிற்சி நிறைவு நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கட்டட நிர்மாணிப்பு பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்துள்ள 20 பயிற்சியாளர்களுக்கும் மரவேலைத் தொழில்நுட்பப் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ள 25 பயிற்சியாளர்களுக்குமான பயிற்சி நிறைவு நிகழ்வே நடைபெறவுள்ளது.

தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் க.சோதிமுருகேசு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகமும் சிறப்பு விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீயும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் பயிற்சியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் 8ஆயிரம் ரூபா பெறுமதியான தொழிற்கருவிகளும் வழங்கப்படவுள்ளன.

இம்முறை இப்பிராந்தியத்தில் கட்டட நிர்மாணத்துறையில் பயிற்சிபெற்ற அனைவரும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் குழுக்களாக இயங்கி தொழில்களை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-405-203)




# கிளிநொச்சி வீரர்கள், வீராங்கனைகள் ஆறு பேருக்குப் போட்டிகளில் பதக்கம்

ஜெயபுரம்,ஜன.4

ஆழிப்பேரலை ஞாபகார்த்தத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் 3ஆம் இடத்தைப் பெற்றது.

இப்போட்டி கடந்த புதன்கிழமை கொழும்பு 7இல் அமைந்துள்ள குதிரைச் சவாரிப் பந்தயத் திடலில் இடம்பெற்றது. இதில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளும் தென்பகுதியைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பங்குபற்றியவர்களில் 6 பேர் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர். வெற்றிபெற்ற வீரர்களுக்கான பதக்கங்களை இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கா வழங்கிக் கௌரவித்தார்.

என்.ரஜீவன், எஸ்.ஜயந்தரூபன், இ. ஆமேஸ் பேனால்ட், இ.தர்சினி, வி.டிவனியா, நிலோஜினி, இ.கிறிஸ்ரீனா ஆகியோரே பதக்கங்களைப் பெற்றவர்களாவர். (த-6-291)

# சாளம்பன் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவை

ஒட்டுசுட்டான்,ஜன.4

ஆழிப்பேரலை ஓராண்டு நினைவை முன்னிட்டு கற்சிலைமடு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் சாளம்பன் கிராமத்தில் சுகாதாரக் கருத்தரங்கும் நடமாடும் மருத்துவ சேவையும் நடத்தப்பட்டது.

திலீபன் மருத்துவசேவை அபிவிருத்திக் குழுத்தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதாரக் கருத்தூட்டல்களைக் கற்சிலைமடு திலீபன் மருத்துவ சேவை சிறப்பு மருத்துவப் போராளி ஈழவாணி வழங்கியதுடன் நோயாளர்களையும் பார்வையிட்டார்.

சுகாதாரப் பணியாளர்கள், முதலுதவி அணியினர் இல்லத்தரிசிப்பு ஊடாக சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தினர்.

முல்லை.அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் குழந்தைகளுக்கான பால்மாவும் வழங்கப்பட்டது. இதில் 200இற்கு மேற்பட்ட மக்கள் பயன்பெற்றனர். (த-6-341)

# முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த 61 ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம்

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் பணியாற்றும் 61 ஆசிரியர்கள் வலயத்துக்குள்ளேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இந்த இடமாற்றம் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும், இதுதொடர்பான ஆட்சேபனைகளைத் தெரிவிக்க விரும்பும் ஆசிரியர்கள் தமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்களூடாக விண்ணப்பிக்குமாறும் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார்

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் பெயர், அவர்கள் முன்னர் கடமையாற்றிய பாடசாலை, இடமாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய பாடசாலை (அடைப்புக் குறிக்குள்) என்பனவற்றின் விவரங்கள் வருமாறு:-

திருமதி சிவகுமாரி வெற்றிவேலு குமிழமுனை ம.வி. (ஆறுமுகத்தான்குளம் ம.வி.), திருமதி ஜெயகலா உதயசீலன்-குமிழமுனை ம.வி. (ஆறுமுகத்தான் குளம் ம.வி.), திருமதி குவேராம்பாள் ரவிகரன் -ஆறுமுகத்தான் குளம் ம.வி. (குமிழமுனை ம.வி.), திருமதி பொன்னரசி ஆறுமுகம் - வலையர்மடம் அ.த.க. பாடசாலை (சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்), திருமதி அவின்நவக்கிளி விமலதாஸ் - கொக்கிளாய் அ.த.க. பாடசாலை (அம்பலவன் பொக்கணை ம.வி.)-

அந்தோனிப்பிள்ளை மங்களதாஸ் - அம்பலவன் பொக்கணை ம.வி. (வலைஞர் மடம் அ.த.க.பா.), செல்வி சிவானந்தரூபி வல்லிபுரம் - மாத்தளன் றோ.க.வி. (அம்பலவன் பொக்கணை ம.வி.), செல்வி கலாவதி தர்மராஜா - அம்பலவன் பொக்கணை ம.வி. (மாத்தளன் றோ.க.வி.), செல்வி தபோதினி கிருஸ்ணபிள்ளை - அளம்பில் றோ.க. (மாத்தளன் றோ.க.வி.) -

திருமதி ஜெயரஞ்சினி ஜேசுராஜா- முல்லைத்தீவு றோ.க. (கள்ளப்பாடு அ.த.க.பா.), திருமதி டார்மினா இராஜலிங்கம் - கொக்கிளாய் அ.த.க. (வெட்டுவாய்க்கால் அ.த.க.), திருமதி திலகேஸ்வரி உதயகுமார் - முல்லைத்தீவு ம.வி. (கள்ளப்பாடு அ.த.க.), சிவபாதம் பத்மராஜா - அளம்பில் றோ.க. (கள்ளப்பாடு அ.த.க.), பிள்ளையனார் சிவகணேசன் -வித்தியானந்தாக் கல்லூரி (தண்ணீரூற்று சீ.சீ.த.க.), திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கம் - கலைமகள் வித்தியாலயம் (வித்தியானந்தாக் கல்லூரி), செல்வி க.சுபாசினி - கலைமகள் வித்தியாலயம் (தண்ணீரூற்று சீ.சீ.த.க. பாடசாலை) -

திருமதி சிவரஞ்சனி-மதிவளர்ச்செல்வன் - முள்ளியவளை த.வி. (கலைமகள் வித்தியாலயம்), திருமதி ஆ.சுகுணதாஸ் - செம்மலை மகாவித்தியாலயம் (உடுப்புக்குளம் த.வி./சிலாவத்தை த.வி.), ம.அன்ரனி ஜீவரட்ணம் -அளம்பில் றோ.க. (உடும்புக்குளம் த.வி.), செல்வி மதியராணி சிவசம்பு -புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி (கலைமகள் வி.), திருமதி சரஸ்வதி செல்லையா-முள்ளிவாய்க்கால் மேற்கு (வெட்டுவாய்க்கால் அ.த.க.), செல்வி தனுசா ஜெயானந்தராசா - கொக்குத்தொடுவாய் அ.த.க. (கலைமகள் வி.), இ.கெங்காதரன் - யாழ். (வித்தியானந்தாக் கல்லூரி)- (த-6,353) **(வளரும்)**



**பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடை கிராஞ்சியில் செயற்பட ஆரம்பித்துள்ளது.**

**இதற்கான ஆரம்ப நிகழ்வில் கடைக் கட்டடத்தைச் சங்கத்தின் உபதலைவர் சி.தவராசசிங்கம் [illegible] படத்தில் காணலாம். பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் து.இரத்தினசிங்கமும் படத்தில் உள்ளார். (படம்: பொ.தங்கராசா, ஜெயபுரம் செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோரச் சூழலை பாதுகாப்பது குறித்த பயிற்சிப்பட்டறை

பரந்தன்,ஜன.4

'தாவர வலய அமைப்பின் மூலம் கரையோர சூழலைப் பாதுகாத்தல்' தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் பொருண்மிய மதியுரையக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இத்திட்டத்தின்கீழ் சோரன்பற்று, தாளையடி, மருதங்கேணி, தர்மங்கேணி பிரதேசங்களில் வீட்டுத்தோட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதனை ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கும் நோக்குடன் இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதியில் மீள்குடியேறிய மக்கள் சூழலை பாதுகாத்தல், இயற்கையைப் பேணும் முகமாக தாவரம், விலங்கு என்பவற்றை வளர்த்தல் தொடர்பாகக் கருத்தூட்டப்பட்டது.

'சொலிடார்' திட்ட அலுவலர், வன வளமாக்கல் பிரிவைச் சேர்ந்த செல்வரத்தினம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (த-352-204)

# மஹிந்தவின் சிந்தனையின் கீழ் மல்லாவியில் புதிதாக நூலகம்!

மல்லாவி,ஜன.4

மஹிந்த சிந்தனைகள்திட்டத்தின் கீழ் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மல்லாவி நகரில் புதிய நூலகம் ஒன்றை நிர்மாணிக்கும் பொருட்டு 15 லட்சம் ரூபாவும் துணுக்காய் கொக்காவில் வீதி திருத்தத்திற்காக 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை அவசர அபிவிருத்தித் திட்டங்களாக 3 மாதத்திற்குள் பூர்த்தியாக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-322)

# பாடசாலைகளை மெருகூட்ட கல்வி அமைச்சால் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன. 4

'பிரியமான பாடசாலையை சிறார்களுக்கு வழங்குவோம்' என்னும் வேலைத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பாடசாலைகளையும் மெருகூட்டுவதற்கான நிதி கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாடசாலைகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் ஏனைய பாடசாலைகளுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பாடசாலையை வர்ணம் பூசி அழகுபடுத்துவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதி கல்வி அமைச்சால் ஒவ்வொரு கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது என யாழ். வலயக்கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் பின் எதிர்காலத்தில் பாடசாலைகள் அனைத்தும் சிறந்த அழகுபடுத்தப்பட்ட பாடசாலைகளாக– மெருகூட்டப்பட்ட பாடசாலைகளாக விளங்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-14-12)

# கிராம அலுவலர் பரீட்சை சனிக்கிழமையன்று

வேலணை, ஜன.4

கிராம அலுவலருக்கான 'சுப்பறா' தரப் பரீட்சை எதிர்வரும் ஏழாம் திகதி சனிக்கிழமை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெற உள்ளது.

இதற்கான அறிவித்தல் பரீட்சைத் திணைக்களத்தால் உத்தியோகபூர்வமாகக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை கடந்த 24 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-167-202)

# உரம் வழங்காததால் விளைச்சல் பாதிப்பு

நவாலி, ஜன.4

*நவாலிப் பிரதேச விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படாமையினால் பெரும்போக விளைச்சல் இம்முறை கேள்விக்குறியாக உள்ளது.*

*இவர்களுக்கு உரம் வழங்கும் உடுவில் விவசாய உத்தியோகத்தர் நீண்டநாள் லீவில் சென்றுள்ளதால், இதுவரை இவர்களுக்கு உரம் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.*

*மேலும் வெள்ளம் நாளுக்கு நாள் வற்றி வருவதால் இனிமேல் உரம் இடமுடியாத சூழ் நிலையும் தோன்றியுள்ளது.*

*இதனால், பல ஆயிரம் ருபா செலவில் நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் அபாயம் தோன்றி உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (3-100)*

# விபத்துகளில் மூவர் காயம்

தென்மராட்சி, ஜன. 4

தென்மராட்சியில் கடந்த வாரம் இடம்பெற்ற இரு மோட்டார் சைக்கிள் விபத்து களில் மூவர் காயமடைந்தனர்.

மோட்டார்சைக்கிள் முன்சக்கர ரயர் வெடித்ததில் தூக்கிவீசப்பட்டு மீசாலையைச் சேர்ந்த ஆர். செல்வபதி (வயது 21) என்ற யுவதியும் மோட்டார்சைக்கிள் முன்சக்கரம் சறுக்கியதில் கச்சாயைச் சேர்ந்த எஸ். தங்கராசா (வயது 48), மிருசுவிலைச் சேர்ந்த ஆர்.மதனராஜ் (வயது 19) ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்தியிரில் சிகிச்சை பெற்று வருகின்றனர். .(3- 117)

# உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் குறைவு

யாழ்ப்பாணம், ஜன.4

ஈவினை, குப்பிளான் மற்றும் புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இம்முறை உருளைக் கிழங்குச் செய்கையில் ஆர்வம் காட்டுவதைக் குறைத்துள்ளனர்.

கடந்த ஆண்டு காலம் பிந்திப் பெய்த மழை காரணமாக இப்பகுதியில் உள்ள உருளைக்கிழங்கு விளைநிலங்கள் பலவற்றிலும் வெள்ளம் தேங்கிப் பெரும் பயிரழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் பெரும்நஷ்டமடைந்தனர்.

இந்த நிலையில், தற்போது விதை உருளைக்கிழங்கின் விலை அதிகரித்துள்ளது.எனினும்,குறைந்த எண்ணிக்கையான விவசாயிகளே உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மழைவெள்ளம் காரணமாக உருளைக்கிழங்கு பயிர் அழிவு ஏற்பட்டமையால் பெரும்பாலான விவசாயிகள் தற்போது உருளைக்கிழங்குச் செய்கையில் ஆர்வமின்றிக்காணப்படுகின்றனர். (எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 - 06 - 1922



மறைவு 05 - 12 - 2005

திருமதி ஏகாம்பரம் மாணிக்கம்

*கடந்த05.12.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.01.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**ஏகாம்பரம் நித்தியானந்தன் குடும்பம் (மகன்),**
**நித்தியானந்தன் கோபிநாத் (பேரன், U.K ).**

கண்டுவில் வீதி, சாவகச்சேரி.

(44774)

## நீங்காத நினைவுகளுடன் 45 ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
குமாரசாமி பிரதீபன்
*புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி மாணவன் (A/L 2003)*

மண் மகிழ 17.03.1984 — கண் நெகிழ 20.11.2005

*இளையவனே! இனியவனே! எம் வீட்டின் கடைக்குட்டியே!*
*எம்மைப் பரிதவிக்க விட்டு நீ சென்று*
*45 நாள்கள் கடந்ததே தீபா!*
*கடைக்குட்டி நீ எங்கள் கண்கண்ட தெய்வம் நீ*
*காலம் எல்லாம் உங்களைக் கைவிடமாட்டேனென்பாய்*
*கைவிட்டு விட்டாய் தம்பி! உன்னைக் கைதவறி விட்டோம் தம்பி!*
*காலம் உள்ளவரை கலையாது உன் நினைவு நாம் கையெடுத்த*
*தெய்வமெல்லாம் கை விரித்து விட்டதடா!*
*எல்லாம் இருந்தும் நாம் எதுவுமற்றோராகிவிட்டோம்.*
*ஏனிந்த விதி எமக்கு எப்படித்தான் தேறிடுவோம்.*

கடந்த 20.11.2005 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம் குமாரசாமி பிரதீபனின் திடீர் மறைவின்போது ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த அன்பு உள்ளங்களுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 03.01.2006 இல் கீரிமலைத் தீர்த்தக் கேணியிலும் இன்று (04.01.2006) புதன் கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறுவதால் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

**புத்தூர் கிழக்கு, புத்தூர்.** (44798) **தந்தை,தாய், சகோதரர்கள்.**

## 45 ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

*மலர்வு 12 - 04 - 1953*



*உதிர்வு 21 - 11 - 2005*

அமரர்
**இரத்தினசாமி செல்வநாதன்** (செல்வம்)

ஐயனார் கலட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசாமி செல்வநாதன் 21.11.2005 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ் சென்ற இரத்தினசாமி - ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவசுந்தரம்- வனசாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ரூபகுமாரியின் அன்புக் கணவரும் சிவநாதன், சுப்பிரமணியம், இராசநாதன், இராசலட்சுமி, செல்வராணி, குணசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமாரி, சிவபாலசுந்தரம் (பபி CEB ) பரராஜசிங்கம், ரதிகுமாரி, சுகுகுமாரி, செல்வகுமாரி, செல்வசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் 45 ஆம் நாள் நினைவுதினமாகிய இன்று (04.01.2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
*கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை.*
செ.ரூபகுமாரி (மனைவி)
(பிரான்ஸ்).
T.P:00[illegible]

(44759)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 - 02 - 1933



மறைவு 05 - 12 - 2005

அமரர்
**செல்லத்துரை சங்கரலிங்கம்**
[ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர்–இலங்கை வங்கி]

*நிலையில்லா இவ்வுலகில்*
*நிலைத்துவிட்ட உன்நினைவால்*
*நினைவிழக்க முடியாமல்*
*நின்னை நினைக்கின்றோம் நாம்*

*கல்வியிலே வல்லவராய்*
*பண்பினிலே நல்லவராய்*
*ஊர்போற்ற வாழ்ந்தவரே உத்தமரே*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.*

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

**வட்டுக்கோட்டை.** (44846)(52)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2006இல் உங்கள் இராசி எப்படி?

## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1

தளராத நம்பிக்கையுடன் கடுமையாக உழைத்து தகுந்த பலன் பெறும் சிம்மராசி அன்பர்களே!

புத்தாண்டில் பயன்தரும் சிந்தனைகளை செயற்படுத்தி உழைப்புக்கேற்ற வெற்றியை பெறுவீர்கள். நேர்மையான செயற்பாடுகளையும், தெய்வ வழிபாடுகளையும் பின்பற்றுவதால் சிரமங்கள் விலகிவிடும். குடும்பத்திற்கு தேவையான பொருளாதாரம் சீராகக் கிடைக்கும். பார்வையில் சாந்தமும், வசீகரமும் கலந்திருக்கும். மனதில் புதிய நம்பிக்கைகளும் அதன் காரணமாக உற்சாக செயல்திறனும் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் சுமூகமான நிலை இருந்தாலும் சக தொழில் சார்ந்தவர்களின் தொந்தரவுகள் உருவாகலாம். உங்களின் எதிர் நடவடிக்கை அதனை சரி செய்யும். தொழில் தொடர்பான அபிவிருத்திப் பணிகளை தகுந்த ஆலோசனைக்குப் பின் செயற்படுத்துவது நன்மை தரும். மூத்த சகோதர வகையினரால் உங்களின் ஒவ்வொரு செயலும் கண்டு கொள்ளப்படும். அவர்களின் தகுந்த ஆலோசனை உங்களை கூடுதல் சக்தியுடன் வழிநடத்தும். வெளியூர் பிரயாணங்களின்போது பணச் செலவை குறைத்துக்கொள்வதால் நன்மை உண்டு. வெளியூர் சம்பந்தமான தொழில் வாய்ப்பு பெற்றவர்கள் தங்களின் பணித்தொடர்புகள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதை சீராய்வு செய்வது நல்லது. அளவான ஓய்வு எடுப்பதால் மட்டுமே சோம்பல் இல்லாத தன்மை இருக்கும்.

**தொழிலதிபர்கள்:** கொம்பியூட்டர், கைத்தொலைபேசி, குளிரூட்டி, தொலைக்காட்சி, வானொலி உற்பத்தி செய்பவர்கள், உற்பத்தியை அதிகப்படுத்தி முன்னேற்றம் காண்பார்கள். பால் பொருள்கள் உற்பத்தியாளர்கள், ஆடை உற்பத்தி செய்பவர்கள், கண்ணாடி, பீங்கான் பொருள்கள், அலங்கார பொருள்கள், வாசனைத் திரவியங்கள், நவ நாகரிக அணிகலன்கள் உற்பத்தி செய்பவர்கள் தங்கள் தொழிலில் கூடுதல் வளர்ச்சி பெற புதிய திட்டங்களை செயற்படுத்துவார்கள். தளபாடம், காலணி, தரைவிரிப்புகள், தோல் ஆடைகள், பிளாஸ்டிக் பொருள், பைப், சிகை அலங்கார அழகுப் பொருள்கள் மற்றும் பட்டுத்துணி உற்பத்தி தொழிலதிபர்கள் தொழில் வளர்ச்சியால் கூடுதல் பண வரவு பெறுவார்கள்.

**வியாபாரிகள்:** உணவுப்பொருள்கள், தளபாட வகைகள், வெள்ளிப் பொருள்கள், எலக்ரிக்கல், எலக்ரோனிக்ஸ் சாதனங்கள், ஆடைகள் மற்றும் தோல்பொருள்கள், சமையலறைப் பாத்திரங்கள், இசை கருவிகள் வியாபாரம் செய்பவர்கள் தங்கள் வியாபாரத்தில் கூடுதல் பணவரவு பெறுவார்கள். கட்டட கட்டுமானப் பொருள்கள், பெயிண்ட் வகைகள், வைரநகைகள், பாய், திரைச்சீலை, அலங்கார விளக்குகள், செல்லப்பிராணி வியாபாரம் செய்பவர்கள் தொழிலில் இருக்கும் போட்டிகளை சமாளித்து பயனுள்ள வளர்ச்சி பெறுவார்கள்.

சுற்றுலா நிறுவனங்கள், ஹோட்டல் நடத்துபவர்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், குடைகள், ரெயின் கோட், குழந்தைகள் பயன்படுத்தும் விளையாட்டு பொம்மைகள் விற்பனை செய்பவர்கள் தொழில் முன்னேற்றமும் கூடுதல் லாபமும் காண்பார்கள். தந்தை வழி உறவினர்கள் தகுந்த துணையாக செயற்படுவர். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமை சிறப்பானதாக இருக்கும். உடல் நலத்தில் தகுந்த கவனம் வேண்டும். எதிரித்தனங்களை சமாளித்துவிடுவீர்கள். வெளியூர் வியாபார தொடர்பில் கவனம் வேண்டும்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் அலுவலகப் பணியாளர்கள் தங்கள் முன் உள்ள சவால்களை சமாளித்து பணியில் நற்பெயர் பெறுவார்கள். ஆன்மீக நம்பிக்கை உள்ள சக ஊழியர்களின் உதவி கிடைக்கப் பெற்று நிம்மதி தரும் மனநிறைவு பெறுவீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் வரவு செலவுகளை பரஸ்பரம் வெளிப்படையாக செயற்படுத்துவதால் மட்டுமே தங்கள் தொழிலைத் திட்டமிட்ட முறையில் சிறப்பாக நடத்த முடியும். சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களின் கூடுதல் உழைப்பினால் மற்றவர் வியக்கும் வகையில் தகுந்த முன்னேற்றம் பெறுவார்கள். குடும்ப உறுப்பினர்களின் தகுந்த உதவி கிடைக்கப் பெறுபவர்கள். மனத்துணிவும், செயற்றிறனும் அதிகரிக்கும். புத்திரர்கள் உதவிகரமாக செயற்படுவார்கள். தந்தைவழி உறவினர்களால் தகுந்த உதவி உண்டு.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி இலக்கை உத்வேக மனநிலையுடன் செயற்பட்டு நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவார்கள். சக ஊழியர்கள் அனுகூலம் செய்யும் மனோபாவத்துடன் செயற்படுவார்கள். சுயதொழில் புரியும் பெண்கள் தங்கள் தொழில் வளர்ச்சி பெறுவதற்கான அனைத்து வசதிகளையும் தடையின்றி பெறுவார்கள். தொழில் சார்ந்த வகையிலுள்ள தடைகள் தாமாக விலகும். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் கணவரின் நல் அன்பை பெற்று நிறைவான பண வசதியுடன் மன மகிழ்வு பெறுவர்.

புத்திரர்களின் ஒவ்வொரு செயலையும் கூடுதல் பயன் தரும் நிலைக்கு உயர்த்துவீர்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும். மாங்கல்ய பலம் அதிகரிக்கத் தகுந்த பூஜை முறைகளை பின்பற்றுதல் நலமாகும். அணிகலன்களை பாதுகாக்கும் விஷயத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

**மாணவர்கள்:** வாகன கட்டுமானப் பணிகள், ஓவியம் வரைதல் பயிற்சிபெறும் மாணவர்கள், இசை, பரதநாட்டியம், நடிப்பு, கிராமிய நடனம் ஆகிய துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதால் சாதனை மாணவர் என்று பெயர் பெறமுடியும். விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் தங்கள் முன் உள்ள இடையூறு எது என அறிந்து விலக்குவதால் சாதனை இலக்கை எட்டிப்பிடிப்பார்கள். கலை, அறிவியல் மாணவர்கள் கூடுதல் சிரத்தையுடன் படித்து சிறந்த தர தேர்ச்சி அடைவார்கள். சக மாணவர்களால் உதவி உண்டு.

தந்தை, மகன் உறவுநிலை அனுகூலமாகவும், குரு சிஷ்ய அமைப்பிலும் இருக்கும். சாகச விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் உரிய பாதுகாப்பு விதிமுறைகளை கட்டாயம் பின்பற்றுவதால் மட்டுமே நன்மை ஏற்படும். சுற்றுலா பயணங்களின் போது உயர்ந்த மலைப் பகுதிகள், நீர் நிலைகள் ஆகியவற்றில் கவனமுடன் செயற்படவேண்டும்.

**அரசியல்வாதிகள்:** கடந்த காலங்களில் கிடைத்த பதவி மற்றும் கௌரவத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு உங்களின் நல்ல நடவடிக்கைகள் இதுகாலம் உறுதுணையாகும். ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் எதிரித்தனம் செய்பவர்களின் இடையூறுகளால் எந்தப் பாதிப்பும் வராது. பதவி பெறுவதற்கான தேர்வுகளில் தேவைப்படும் எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்து அனுகூல நற்பலன்கள் பெறுவீர்கள். அரசியல் வகையில் உறுதுணை புரியும் புத்திர அமைப்பை பெற்றவர்கள் அனைத்து முயற்சிகளிலும் ஆதாய வெற்றியை பரிசாக பெறுவார்கள். ஆன்ம பலத்தி னாலும் ஆன்மீக வழிபாட்டினாலும் குடும்ப முன்னேற்றம் வளர்ச்சி பெறும். பணப் புழக்கம் சீரான நிலையில் இருக்கும். அரசியலுடன் பிற தொழில் வாய்ப்பை பெற்றவர்கள் கூடுல் முயற்சியால் வளர்ச்சி காண்பார்கள். வெளியூர் பயணங்களால் அனுகூல பலன் உண்டு.

(ஏனைய இராசிகளுக்கான பலன்கள் தொடர்ந்து வெளிவரும்)

# குண்டெறிந்தவர்கள் எங்கே எனக் கேட்டு சுத்தியலால் எனது தலையில் அடித்தனர்

### படையினரின் கொடூரத்தை விவரிக்கிறான் பாதிக்கப்பட்ட மாணவன்

யாழ்ப்பாணம்,ஜன.4

''குண்டெறிந்தவர்கள் எங்கே ஓடினார்கள் எனக் கேட்டுக் கேட்டு என்னை சுத்தியலால் இராணுவத்தினர் தாக்கினார்கள்.''

கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வரணிப்பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் மாணவனான சத்தியறொசான் இவ்வாறு கூறினார்.

இராணுவத்தினர் கண்மூடித்தனமாக சுத்தியலால் தாக்கியதில் இவர் தலையிலும் கையிலும் படுகாயம் அடைந்தார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக - அதனோடு தொடர்புடையவர்கள் எவரையும் எனக்குத் தெரியாது என்று கத்திய போதிலும், அதனைச் செவிமடுக்காத படையினர் ''குண்டெறிந்தவர்கள் எங்கே'' எனக் கேட்டுக் கேட்டுச் சுத்தியலால் தொடர்ந்து ஓங்கி ஓங்கி அடித்தார்கள் என்று தனது அனுபவத்தைக் கூறினார் சத்தியறொசான்.

அவர் தனது அனுபவத்தை தொடர்ந்து கூறியபோது:-

எனது வீட்டின் முன்பாக நின்றவேளை திடீரென குண்டுச் சத்தம் கேட்டது. தொடர்ந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால், அச்சமடைந்த நான் நிலத்தில் வீழ்ந்து படுத்துவிட்டேன்.

சூட்டுச் சத்தம் ஓய்ந்ததும் மெதுவாக எழுந்து எனது வீட்டினுள் செல்ல முற்பட்ட வேளை இராணுவத்தினர் என்னைப் பிடித்து இழுத்துச் சென்று அருகில் உள்ள இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் என்னைப்போல பலரையும் பிடித்து இழுத்துவந்தனர். அதன்பின்னர் கொட்டன்கள், நீர்ப்பைகள், சுத்தியல் போன்றவற்றால் எல்லோரையும் தாக்கத் தொடங்கினர்.

குண்டெறிந்தவர்கள் எங்கே ஓடினார்கள்? எனக் கேட்டு என்னைச் சுத்தியலால் பலமாகத் தாக்கினர். நான் சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவன் என்று கூறினேன். அதையும் பார்க்காமல் கடுமையாகத் தாக்கினர்.

இதனால் எனக்கு தலையிலும் கையிலும் காலிலும் படுகாயம் ஏற்பட்டது. கையில் பாரிய கண்டல் காயம் ஏற்பட்டது. (காயத்தைக் காட்டுகிறார்).

ஒரு மணிநேரத்தின் பின்னர் என்னையும் சிலரையும் செல்ல அனுமதித்த படையினர் உள்ளூரில் மருந்து கட்டும்படி பணித்தனர் - என்றார். (த-12-14)

# யாழ்.இந்துவில் அனுமதி பெற விண்ணப்பித்தோருக்கு

யாழ்ப்பாணம்,ஜன.4

தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகளுக்கு மேல் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அனுமதி பெறுவதற்காக கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்த மாணவர்களை இன்று புதன்கிழமை காலை 10மணிக்கு உரிய விண்ணப்பப் படிவத்தை யாழ்.இந்துக் கல்லூரியின் அதிபர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் வீ.கணேசராசா அறிவித்துள்ளனர். (ஒ)

# கண்டி ஐ.தே.கட்சி எம்.பி. 'பல்டி' அடிக்கத் தயாராகிறார்

கொழும்பு, ஜன.4

ஐக்கிய தேசிய கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல அரசுடன் இணையவுள்ளார் எனவும் - முக்கியமான அமைச்சுப் பதவி ஒன்று அவருக்குக் காத்திருக்கிறது என்றும் தெரிய வருகின்றது.

அவர் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியிருந்தார் என்றும் அதனையடுத்து அமைச்சுப் பதவியை ஏற்கவிருந்தார் என்றும் தவிர்க்க முடியாத காரணத்தால் பதவி ஏற்பு ஒத்திப் போடப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த சில நாள்களில் அவர் அமைச்சுப் பதவியை ஏற்பார் எனத் தெரியவருகிறது.

மொத்தம் 15 ஐ.தே.கட்சி எம்.பிக்கள் அரசில் இணைய உள்ளார்கள் என்றும் ரம்புக்வெல்லவும் அவர்களில் ஒருவர் என்றும் எனினும் ஏனையோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட மாட்டாது என்றும் அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# இரசாயன பாடப் பெறுபேறுகள் மீள்மதிப்பீடு

கொழும்பு,ஜன.4

2005 ஆம் ஆண்டிற்கான ஜி.சீ.ஈ.உயர் தரப் பரீட்சையின் இரசாயன பாட பெறுபேறுகள் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

பல்தேர்வு வினாப்பத்திரங்களுக்கான விடைத்தாள்களை மதிப்பிடும் ஓ.என்.ஆர் ஸ்கானர் இயந்திரத்தில் ஏற்பட்ட தவறை சரி செய்வதற்காக மீள்மதிப்பீடு செய்ய நேர்ந்ததாகவும் -

இதற்கென விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் -

கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரத்தின ஹெலகே தெரிவித்துள்ளார். (ஒ-6)

# இலங்கை - இந்திய கூட்டறிக்கைக்கு வைகோ. கடுமையான கண்டனம்!

### படையினரின் போர்நிறுத்த மீறல்கள் குறித்து எதுவுமே இல்லை எனச் சுட்டிக்காட்டு

சென்னை, ஜன.4

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் பின்னர் இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை தமிழர்களுக்குச் சாதகமானதாக இல்லையெனக் குற்றஞ்சாட்டியிருக்கிறார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ.

சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டிருக்கும் வைகோ, இலங்கைக்கு இந்தியா இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்கக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

''இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை அடுத்து இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கை தமிழர்களுக்கு சாதகமானதாக இல்லை. போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறவேண்டாமென அந்த அறிக்கையில் புலிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் போர்நிறுத்த மீறல்கள் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

''ஆயுதம் வழங்குவது உட்பட இராணுவ ரீதியான உதவிகள் எதனையும் இந்தியா இலங்கைக்கு வழங்கக்கூடாது. நிதி உதவியும் அளிக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் அது தமிழர்களுக்குச் செய்யும் துரோகமாகும். இலங்கை விடயத்தில் இந்தியா நடுநிலையோடு பாரபட்சமற்ற வகையில் செயற்படவேண்டும்.

''பலாலி விமான நிலையத்தை சீரமைக்க இந்தியா உதவக் கூடாது. இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதில்லை என்ற கொள்கை பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை காங்கிரஸ் அரசும் பின்பற்றவேண்டும்.

''இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு இந்தியா உதவவேண்டும். அதைவிடுத்து தமிழர்களுக்கு எதிராக செயற்படும் இலங்கை அரசின் முயற்சிகளுக்கு இந்தியா துணை போகக் கூடாது.''

- இவ்வாறு கூறினார் வைகோ.

(ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**O/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே
உங்களுக்கான கனனி விரிவுரைகள் பின்வரும்
திகதிகளில் ஆரம்பமாகின்றன.

BATCH - I (WEEK DAY) - 06/01/2006 - 3.30 p.m.
BATCH - II (WEEK DAY) - 07/01/2006 - 9.00 a.m.

**C.B.COMPUTER ACADEMY**
T.P.No. 021-4590291 Station Road, Kondavil.



**CHEMISTRY CENTER**
Temple Road (Green Park முன்பாக)
A/L 2008
ஆரம்பம்:04-01-2006 புதன், வியா4.30 p.m.
By:- அன்பழகன் B.Sc.


## திருவெம்பாவை பூஜை

சங்கானை,ஜன.4

சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று புதன் கிழமை முதல் திருவெம்பாவை பூஜை நடைபெற்று எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளியன்று நிறைவுபெறவுள்ளது.

இப் பத்து நாள்களும் மாவடி இளைஞர், மகளிர் மன்றத்தினரால் பஜனைகள் நடத்தப்படவுள்ளன. (த-29)


**MATHS CENTRE**
M.M.V. Road, Nelliady.
A/L - 2008 (கலை)
★எமது வழமையான ஆசிரியர் குழுவுடன்
★புவியியல் - திரு. சிறீதர்
ஆரம்பம்:- 5-1-2006 (வியாழன்)
8. a.m. (ப.நே) (சி-47175) (54-15-12)



**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டு விழா**
**12.02.2006**

மேற்படி விழாவை முன்னிட்டு மாற்றுவல்லுவுடையோர்களுக்கு இடையே பின்வரும் போட்டிகளை ஜனவரி 24 தொடக்கம் 28ஆம் திகதி வரை நடத்த எண்ணியுள்ளோம். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாற்று வலுவுடையோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20-01-2006இற்கு (வெள்ளிக்கிழமை) முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எமது காரியாலயத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**
1. முழுப்பெயர்:
2. தபால் முகவரி:
3. வயது:
4. பால்:
5. குறைபாட்டின் தன்மை:
6. பங்குபற்றும் போட்டிகள்:
7. கையொப்பம்:

**ஓட்டப்போட்டிகள்** - முச்சக்கரவண்டி, இருசக்கரவண்டி
**ஏனைய போட்டிகள்**- மாலை கட்டுதல், கோலம் போடுதல், கட்டுரை, கவிதை, சங்கீதம், சித்திரம் வரைதல், கதிரை பின்னல், தையல், சிகை அலங்கரிப்பு பிறேக் நடனம், வினோத உடை, திருக்குறள் மனனம்.

குறிப்பு : ஒருபோட்டியாளர் மூன்று போட்டிகளில் மட்டும் பங்குபற்ற முடியும்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,
100, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
-தலைவர். (44886)(26-16-19)



**HIGH SPEED INTERNET BROWSING**
நல்லைக் கந்தன் நெற் கபே
OPEN : 9.00 a.m. TO 11.00 p.m.
62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
[47154] தொ.பே 021 222 2779


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக
கடமையாற்றும்
திரு சி.நகுலேந்திரனின் மருமகன்

**செல்வன் சிவலிங்கம் சிவரூபன்**

அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

வா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை,
நீர்வேலி.
(44873)(26-16-19)

அதிபர், ஆசிரியர்கள்,
திட்டமிடல் உதவியாளர்,
மாணவர்கள்.


**உயர் கணக்கியல் கல்லூரி**
சித்தன்கேணி
2008 A/L
**வர்த்தகப்பிரிவு**
ஆரம்பம் : 06.01.2006
பி.ப. 5 மணி
நிர்வாகி


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11-06-1936

மறைவு
16-12-2004

திதி: 04.01.2006

கோப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி
**சின்னத்துரை செல்லம்மா**
(தங்கமுத்து)

ஐயிரண்டு திங்கள் சுமந்து
அன்போடு பேணி வளர்த்து
ஆளாக்கி ஆதரித்த எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆராதனைத் தினமான இன்று நினைக்க மனம் கலங்குகின்றது
ஆண்டொன்று இன்றோடு பறந்தோடி விட்டது
ஆனாலும் எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் பிரிவின் சோகம்
இன்னும் எம்மை விட்டு அகலவில்லை

"தேவி இல்லம்"
நாவலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்,
சின்னத்துரை - கணவர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(44842)


**பிளாஸ்ரிக்**
**அடையாள அட்டைகள்**
உங்கள் தொழில் சார்ந்த பிளாஸ்ரிக் அடையாள அட்டைகளை துல்லியமாகப் பிறிண்ட் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
T.P:021-4590268.0776622981
ANDRA DIGITAL IMAGE
உப்புமடம் சந்தி,
கே.கே.எஸ் றோட்,
கோண்டாவில்.



**D C M**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
A/L 2008
மாலைநேர வகுப்புகள்
**வர்த்தகப் பிரிவு**
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
ஆரம்பம் : 05.01.2006
வியாழன் 4 மணி ப.நே.
(44879)(26-16-19)


# 14ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

மண்ணில்
23.05.1949

விண்ணில்
09.01.1992

**04. 01. 2006**




ஆலமர விருட்ச வேராக இருந்து
எம்மைத் தாங்கிய தந்தையே!
ஆறாத்துயரில் எம்மை மூழ்க விட்ட
உங்கள் விண்ணுலக முகவரியாதோ!
உங்கள் நினைவுகளுடன் - இன்றும்
உங்கள் விருட்ச நிழலில் வாழும்...!


அமரர்
**இராசையா கந்தசாமி**
(கீதா ஆபரண மாளிகை - சாவகச்சேரி)

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

உங்கள்
குடும்பத்தினர்.
(44894)(54-26-16-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








புத்தாண்டை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கு இடையே போட்டிகள் நடத்தப்பட்டன. பிரத்தியேகத் தளமொன்றில் இடம்பெற்ற இந்தப் போட்டி நிகழ்வில் துப்பாக்கி சுடும் போட்டிகள் இடம்பெறுவதையும் போட்டி இலக்கில் ஒன்றை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் மற்றும் தளபதிகள் மதிப்பிடுவதையும் போட்டியில் வெற்றிபெற்ற போராளி ஒருவருக்கு பரிசு வழங்கப்படுவதையும் பரிசளிப்பு நிகழ்வையடுத்து இடம்பெற்ற அரங்க நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# ஈழத்தமிழருக்கு உதவுவதற்கு நிகரான தமிழ் இனப்பணி வேறெதுவும் கிடையாது

## இந்திய முதுபெரும் கல்வியாளர் தெரிவிப்பு

ஈழத்தமிழருக்கு உதவுவதற்கு நிகரான தமிழ் இனப் பணி வேறேதும் கிடையாது. இந்தியாவின் முதுபெரும் கல்வியாளர்களில் ஒருவரான வா.செ.குழந்தைசாமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் சென்னையில் ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டை ஒருங்கிணைத்து நடத்தியவரான திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஈழப்பிரச்சினை தொடர்பாகத் தங்கள் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் பற்றிய செய்தியைப் பார்த்தேன்.

மிகுந்த மகிழ்ச்சியும் மன நிறைவும் கொண்டேன். இலங்கைத் தமிழருக்கு நியாயம் செய்ய உதவுவதை ஒத்த தமிழ்ப்பணி, தமிழ் இனப் பணி வேறு எதுவும் இல்லை

அயல்நாட்டுடன் நல்லுறவு என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிரான இலங்கை இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு இந்திய அரசு துணை போய்விடக் கூடாது என்பதை வலியுறுத்தும் வகையில் தாங்கள் மேற்கொண்டிருக்கும் இந்த முயற்சிக்கு தமிழினம் தலைவணங்கி நன்றி சொல்லும்.

தமிழர் நலன் விழையும் எண்ணற்ற தமிழ் உள்ளங்களோடு நானும் சேர்ந்து தங்களுக்கு மனம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரியப்படுத்திக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன் இவ்வாறு வா.செ.குழந்தைசாமி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் புகழ்பெற்ற பொறியியல் பல்கலைக்கழகமான சென்னை அண்ணா பல்லைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றியவர் வா.செ.குழந்தைசாமி. நீர்ப்பாசனப் பொறியியலாளராக இருந்தபோதும் தமிழ் உணர்வாளராக தமிழ் இலக்கியவாதியாகத் திகழ்ந்தவர். புதுடில்லி இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் வா.செ.குழந்தைசாமி பணியாற்றினார்.

குலோத்துங்கன் என்ற பெயரில் இவரது கவிதைகள் பலவும் தமிழக முன்னணி ஏடுகள் வெளியாகி, தொகுப்பு நூல்களாகவும் வந்துள்ளன.

(ஒ)

# ஈழத்தமிழர் குறித்த நிலைப்பாடு மாறவில்லை என்கிறார் கருணாநிதி

சென்னை,ஜன்.4

இலங்கையில் உள்ள தமிழர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்படக்கூடாது என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை என்று கூறியுள்ளார் அக்கட்சியின் தலைவர் மு.கருணாநிதி.

சென்னை ஊடகவியலாளரிடம் அவர் கடந்த திங்கட்கிழமை கூறியதாவது:-

இலங்கைக்கு இராணுவ உதவி எதையும் இந்திய அரசு அளிக்கக்கூடாது என்று பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பாக அக்கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர். அதற்கு மாறான நிலைப்பாட்டில் பிரதமர் இருப்பதாகத் தெரியவில்லை.

தி.மு.கவைப் பொறுத்தவரை மத்திய அரசின் முடிவை ஆதரிப்பது என்ற முன்னைய நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை.

அதேசமயத்தில் இலங்கையில் உள்ள தமிழர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்படக் கூடாது என்பதிலும் எங்கள் நிலைப்பாடு மாறவில்லை. என்றார்.

(ஒ)

# உலர் உணவு நிவாரண விநியோகத்தில் உதவிப்பணம் பெறுவோர் புறக்கணிப்பு

வலி.மேற்கு,ஜன.4

யாழ்.மாவட்டத்தில் வறுமையிலும் வறுமையிலான நலிந்த குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

இதில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், காசநோய், புற்றுநோய் ஆகிய தீராத நோய்களினால் பீடிக்கப்பட்டோருக்கான அரச உதவிப் பணம் போன்ற உதவிகளைப் பெறும் வயோதிபர்கள் மற்றும் அங்கவீனர்கள் ஆகியோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்ட இந்த இலவச உலர் உணவு நிவாரணம் தங்களுக்கு ஏன் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட வயோதிபர்கள், அங்கவீனர்கள், நோயாளர்கள் ஆகியோர் கிராமஅலுவலர்களிடம்கேள்வியெழுப்புகின்றனர்.

கிராம அலுவலர்கள் இந்த வறுமையான நலிந்த குடும்பங்களுக்கு பதில் கூறமுடியாமல் திணறுகின்றனர்.

யாழ்மாவட்டத்தில் அரசினால் வழங்கப்படும் உதவிப் பணம் பெறும் சகல குடும் பங்களுக்கும் இலவச உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு அரச அதிபர் கே. கணேஷ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொது அமைப்புக் [illegible] விடுத்துள்ளன.

(ஒ-175)






# வலி.மேற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

வலி.மேற்கு,ஜன.4

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் நேற்றையதினம் இந்தக் கூட்டங்களை நடத்த முடியவில்லை என்றும் -

சம்பந்தப்பட்ட அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும் எதிர்வரும் 10ஆம் திகதி இந்தக் கூட்டங்களுக்குத் தவறாது சமூகம் அளிக்கவேண்டும் என்றும் - பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ-175)

# சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

வலி.மேற்கு,ஜன.4

நீர்வேலி றோ.க.பாடசாலையின் நூலக அபிவிருத்திக்கென கடந்த 28ஆம் திகதி நடைபெறவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் அன்றைய தினம் நடைபெறவில்லை என்றும் -

சீட்டிழுப்பு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (எ)

# தென்மராட்சியில் கல்விச் செயலமர்வுகள்

தென்மராட்சி,ஜன.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6, தரம் 9 வகுப்புகளில் தமிழ், கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 6, 9 ஆகிய வகுப்புகளில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.தேவநாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரு நாள்கள் விசேட கல்விச் செயலமர்வு எதிர்வரும் 7ஆம் 8ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் தலா இரண்டு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ஒ-117)

# பல்கலை. வணிக பீட மாணவர் ஒன்றியம் திருமலை படுகொலைகளுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன.4

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் தமிழ் மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐவர் அரச கூலிப்படையாலும் அதன் கைக்கூலிகளாலும் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் மீதும், தமிழ் மாணவர்கள் மீதும் நடத்தப்படுகின்ற வன்முறையின் தொடர்ச்சியே இதுவாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழர் தாயகத்தில் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கும் ஒரு நடவடிக்கையே இதுவாகும். அதுமட்டுமன்றி படையினர் கடந்த மாதத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவித்து தமிழ் மக்களைக் கொன்று வருவதுடன் கொலைகளை நியாயப்படுத்தி அப்பட்டமான பொய்களைக் கூறி வருவதும் நீங்கள் அறிந்ததே.

இனி வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தொடருமானால் மாணவர்கள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்த வேண்டிவரும் என்பதை அரசுக்கும் அதன் கூலிப்படைகளுக்கும் தெளிவாகக் கூற விரும்புகின்றோம். அத்துடன் கூலிப்படைகளால் உயிர்மாய்க்கப்பட்ட எமது அன்புச் சகோதரர்களுக்கு கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன், அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6445919 முதல் 6456436 வரை. சீட்டிழுப்பு இல. 199 திகதி 02-01-2006

### வெற்றி எண்கள்

**7 5 8 6 1 3** சுப்பர் எண் **13**

ஜக்பொட் பரிசு ரூ. 14,514,275/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 14,514,275/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 1 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 9 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 94 | 5,000/= | 470,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 928 | 500/= | 464,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9,270 | 50/= | 463,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண்கள் | 91,876 | 10/= | 918,760/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 9 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 91 | 1,000/= | 91,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 931 | 100/= | 93,100/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9,192 | 20/= | 183,840/= |
| | | மொத்தம் ரூ. | 4,179,200/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,781,800/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவ | 6446926-0-90 |
| பதுளை | 6447664-8-11 |
| குருணாகல் | 6451752-7-42 |
| நுவரேலியா | 6454525-9-79 |
| அம்பாந்தோட்டை | 6455193-7-20 |
| அநுராதபுரம் | 6446975-5-50 |
| மொனராகல | 6451489-0-03 |
| புத்தளம் | 6455431-8-16 |

**இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்**

**ரூ. 14,772,075/-**

தொடர் இல. 7369224 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜனவரி 05 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## 'பெற்றோமக்ஸ்' வெடித்து கணவன்-மனைவி காயம்!

'பெற்றோமக்ஸ்' விளக்கு வெடித்ததில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர். நேற்று முன்தினம்அல்வாய் வடக்கில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவகுமார் (வயது 29) அவரது மனைவியான சிவகுமார் நிசாந்தினி (வயது 26) ஆகிய இருவருமே படுகாயமடைந்த வர்கள் ஆவர். இவர்கள் இருவரும் உடனடி யாக மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டனர். (ஒ-78)

## கேம்பிரீட்ஜ் - சங்கானை

ஆரம்பம்: 05.01.2006 பி.ப. 4 மணி

**A/L கலைப்பிரிவு 2008**

| | |
|---|---|
| தமிழ் | - இரா. குமரகுரு |
| இந்து நாகரிகம் | - S.ஜெயக்குமார் |
| புவியியல் | - N.பாபு |
| அளவையியல் | - S.R.J. சுதன் |
| கிறிஸ்தவம் | - S.யூட் |

(கி-47104)

குறிப்பு : 2006 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறும் -நிர்வாகி.

## முடிவில்லா நினைவலைகள்...

60 ஆவது அகவையில் | முதலாவது ஆண்டு நிறைவில்



**வேலுப்பிள்ளை கருணாநிதி**
(பிரபல CIMA விரிவுரையாளர், நிறுவுநர் Rapid Results Institute, Colombo - Jaffna)

அன்னை மடியில்: 05-01-1946
ஆண்டவன் அடியில்: 07-04-1994



**கருணாநிதி கஜன்**
( A/L - 98' கணிதப்பிரிவு மாணவன் யா/பரியோவான் கல்லூரி)

அன்னை மடியில்: 27-07-1979
ஆண்டவன் அடியில்: 04-01-2005

*எமைப்பிரிந்து நீவீர் தூர இடம் சென்றாலும்*
*ஆறிடுமோ எம்மிதயம்*
*அன்பு பொங்கும் உங்கள் முகங்கள் எங்கே?*
*புன்னகை சிந்தும் இதழ்கள் எங்கே?*
*எம்முடன் ஒன்றாய் குதூகலித்த நாள்கள் எங்கே?*
*நினைவழியா அந்நாள்களையெண்ணி ஏங்குகிறோம்*
*உங்கள் நினைவுகள் என்றும் அழியாது*
*எம் இதயங்களில் நிலைத்திருக்கும்*

*212, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (44895)(21.15.34)

*பிரிவால் துயருறும்:* **குடும்பத்தினர்.**

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

கண்மகிழ் **10.11.1981** | கண்நெகிழ் **21.11.2005**



அமரர்
**சிவசுப்பிரமணியம் பானுருபன்**

கண்களும் பட்டனவோ காலன் உனைப் பறித்திடவே
கரைகாணா சோகத்தில் நாம் இங்கு அழிந்திடவே
மண்ணிலே வாழும்வரை மறைந்திடாது உன் நினைவு
எம்மோடு உலாவந்த ஒளி நிலவே
என்னாளும் நினதன்பு நிழல் போலத் துணைவருமே!

*கடந்த 21.11.2005 அன்று சிவபதமடைந்த எமது ஒளி விளக்கின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியும் எமக்கு சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனை வருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*இன்று (04.01.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடை பெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்தி லும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

குறிப்பு: அழைப்புக்கிடைக்காதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பை ஏற்றுக் கலந்துகொள்ளவும்.

மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய்,
கரவெட்டி.

என்றும் நீங்காத நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

(கி-47200) (54.15.34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19-04-1939 உதிர்வு 27-12-2003

## அமரர் நாகமணி சிவானந்தம்

(ஆனந்தம் மெக்கானிக்)

திதி: 04.01.2006

பார்க்கும் இடமெல்லாம் உங்கள் உருவம்
கேட்கும் ஒலியும் உங்கள் ஒலியே!
நாம் பாரினில் உள்ள வரை எமை விட்டுக் கலையாது உங்கள் நினைவு
என்றும் உம் நினைவுகள் எம்மோடு வாழுமையா!

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மகள் மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(44915)(18-45-12)

# 31 ஆம் நாள் நினைவு

பிறப்பு 03 - 07 - 1936



இறப்பு 05 - 11 - 2005

## அமரர் மயில்வாகனம் பாலசிங்கம்

முப்பத்தொரு நாள்கள் தான் கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற்று அமைதிபெற
ஆண்டவனை என்றும் வேண்டுகின்றோம்

*இன்று(04.01.2006)புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம். (44908)(18-45-12)

குடும்பத்தினர்.

# 16ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 31 - 08 - 1941



மறைவு 20 - 12 - 2005

## சுப்பிரமணியம் கந்தசாமி

(சிற்ப ஆச்சாரி)

அன்புத் தெய்வமே!
அவனி போற்ற வாழ்ந்தீர்! பண்பால் உயர்ந்து
பாசமாய் எங்களை வளர்த்த தந்தையே!
அன்பு மொழிபேசி அரவணைத்த மாமனாரே!
பேரனாகி எம் மழலைகளை மனமகிழ்ந்த
எங்கள் அன்புத் தாத்தாவே!
அகிலம் விட்டுச்சென்று பதினாறு நாள்கள்
சென்றாலும் உங்கள் நினைவு மட்டும் எம் நெஞ்சில் நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.10, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (44917)(18-45-12)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## *சின்னையா பார்வதி (அன்னாள்)*



சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பார்வதி நேற்று(03.01.2006) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சின்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி(பூநகரி) மற்றும் அண்ணாதுரை (ஜேர்மனி), இராசேஸ்வரி(உடுவில்), சின்னத்துரை(சாவகச்சேரி), ஞானேஸ்வரி (கொக்குவில்), செல்வராஜ் (உடுவில்), பாலச்சந்திரன்(டோகா), காலஞ்சென்ற காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சபாரத்தினம் (பூநகரி), பரமேஸ்வரி(ஜேர்மனி), சந்திரன்(மல்வம்), கனகாம்பிகை(சாவகச்சேரி), ஸ்ரீ நாகேந்திரராஜா (கொக்குவில்), துர்க்காஜினி(உடுவில்), தீபா (நவாலி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.01.2006) புதன்கிழமை நடைபெற்று,பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி சேமக்காலைக்கு நண்பகல் 12 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில்.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


**ராஜா** யாழ்ப்பாணம்

உங்கள் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி, ஆனந்தராஜ் நடித்த
**அய்யர் I.P.S**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.00 மட்டும்

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்

அர்ஜுன், நமிதா, வடிவேல்
**ஆணை**
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15



**நாகம்ஸ்** சுன்னாகம்

சிலம்பரசன் நடித்த
**தொட்டி ஜெயா**
தினசரி: புதியநேரம் 10.30, 2.30, 5.30

**மனோகரா** யாழ்ப்பாணம்



இந்தியாவிலும்
இலங்கையிலும் ஒரேதின
வெளியீடு
சூர்யா, த்ரிஷா,
வடிவேல் நடித்த
**ஆறு**
தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30,10.30


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு நாகம்மா

*(சின்னம்மா)*



மானிப்பாய் வடக்கு, மெமோரியல் லேனை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு நாகம்மா அவர்கள் 01.01.2006 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து-செல்லம்மா தம்பதியரின் இளையபுத்திரியும் தில்லையம்பலம் தங்கமுத்துவின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் சூரியகலாவின் (சுவிஸ்) அன்புத் தாயாரும் இராமேஸ்வரன், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நன்னித்தம்பி, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் இரத்தினம்மா, காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் கனேஸ், ரூபா, பிரேம் ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும் பாஸ்கரன், கோமதி, சிந்துஜா, காலஞ்சென்ற நந்தினி மற்றும் ஜெனனி, றோய், றொசானி, தீபா, சோபா, தாரகன், நிரோசா, நிவேதன் ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும் தன்னியா, திவ்வியா, சொபியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, இன்று(04.01.2006) புதன்கிழமை பி.ப. 1 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-47201)
(18-45-12)

தகவல்:
தி.இராமேஸ்வரன்.

*மெமோறியல் லேன்,மானிப்பாய்.*
*தொ.பே.: 0779120405*

## தாமோதரம்பிள்ளை குலசேகரம்(குணம்)

(முன்னாள் படப்பிடிப்பாளர்,
குகன் ஸ்ரூடியோ)



அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட தாமோதரம்பிள்ளை குலசேகரம் 03.1.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் குணசீலன் (லண்டன்)குணசீலா, திலகேந்திரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - நிதி - யாழ்.மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகரத்தினத்தின் அன்புச் சகோதரனும் கலைக்குமாரி, புவனேந்திரராசா (புவனேந்தி உரிமையாளர் செல்லப்பிள்ளையார்- நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரி,கஜன், நிவேதினி, பிரவீன்,பவித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2006)புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெல்லியடியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்ஸப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-47195)
(18-45-12)

தகவல்:
[illegible]

*[illegible]*
*021 226 3261 ,0777222124*

# மரண அறிவித்தல்கள்

## *திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை*



(ஜெகதா ஹாட்வெயார்ஸ்-ஜெகதா மொபைல் உலகம்)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் 145/3, பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை 02.01.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - பொன்மலர் தம்பதியரின் அன்பு மகளும் நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் தெட்சணாமூர்த்தியின் (ஜெகதா ஹாட்வெயார்ஸ்) அன்பு மனைவியும் நிஷாகரன் (ஜெகதா மொபைல் உலகம்), நிஷாந்தன் (Nct குடிசார் இயந்திரவியல் இறுதி வருடம், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெகநாதன், சிறீஸ்கந்தராசா, சாந்தரூபி, வசந்தகுமார், தயாபரன், நிர்மலாதேவி(ஜேர்மனி), இந்திரவதனா, ஜெயவதனா,ஜெயமாலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2006) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெட்சணாமூர்த்தி (கணவர்),
நிஷாகரன் (மகன்),
நிஷாந்தன்(மகன்).

*145/3, பிரப்பங்குளம் லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.021 222 8169*

(44901)
(18-45-12)

## இராமையா செட்டியார் முத்துலிங்கம் செட்டியார்

(சி.இராமையா செட்டியார் அன் சன்ஸ் உரிமையாளர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்டவருமான இராமையா செட்டியார் - முத்துலிங்கம் செட்டியார் அவர்கள் நேற்று (03.01.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையா செட்டியார் - மனோன்மணி தம்பதியரின் அருமை மகனும் ஜெகநாதன் செட்டியார் - அன்னப்பா தம்பதியரின் அருமை மருமகனும் பரமரத்தினம் அம்மாவின் அன்புக் கணவரும் ராஜாராமின் பாசமிகு தந்தையும் செல்வராணியின் அன்பு மாமனாரும் சாயிமா, டக்சனா, லிங்காயிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் செந்தில்ராசா செட்டியார், மகாதேவா செட்டியார், பாலசுப்பிரமணியம் செட்டியார் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மனோன்மணி வாசா'*
*236/5, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பேசி இல.:222 3343* (44904)(18-45-12)

தகவல்:
மு. பரமரத்தினம் (மனைவி),
மு.ராஜாராம் (மகன்).

## *திருமதி பத்மநாதன் நளினி*



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் நளினி, வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன் அவர்களின் பாசமிகு மனைவி நேற்று (03.01.2006) செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் ஏழாலைமேற்கு திரு. திருமதி திருஞானச்செல்வம் தம்பதியரின் பாசமிகு மகளும் ஏழாலை மேற்கு சித்த வைத்திய பேரறிஞர் திரு.திருமதி பேரம்பலம் தம்பதியரின் மருமகளும் குமரகுருபரன் (அபிவிருத்தி உதவியாளர், யாழ். போதனா வைத்தியசாலை), கோகுலரமணன் (பிரான்ஸ்), திருமதி செல்வபாரதி மதிவண்ணன் (கனடா), பவதாரணி (மாணவி, சித்த ஆயுள்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும் மதிவண்ணன் (கனடா), திருமதி பிரதீபா ஆகியோரின் அன்புமிகு மாமியும் சாயிகிருத்திகாவின் பாசமிகு பேர்த்தியும் ஆனந்தநடேசன் (கோறல் ரேஸ்ரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச் சகோதரியும் திருமதி விஜயகலா அவர்களின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2006) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்துமயான்த்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஈஸ்வரஜோதி'*
*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.* (44914)(18-45-12)

தகவல்:
வைத்தியகலாநிதி
பேரம்பலம் பத்மநாதன்
(கணவர்).

## *திருமதி மகேஸ்வரி அம்பலவாணர்*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி அம்பலவாணர் 02.01.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி நாராயணபிள்ளை அம்பலவாணரின் அன்பு மனைவியும், சந்திரா (இளைப்பாறிய ஆசிரியை-கொழும்பு), சகுந்தலா(இளைப்பாறிய ஆசிரியை-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற வரதராசா, க.ஜெயரத்தினம்(கனடா), திருமதி திரவியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தர்மதேவி, குமாரகுலசிங்கத்தின் அன்புச் சிறிய தாயாரும் தர்மசுந்தரி, தாரணி, கமலினி, மயூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சங்கீதா, அஸ்வினி, பிரசாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் பாக்கியம், கணேசன், சறோஜா ஆகியோரின் அன்பு வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்லூரி வீதி,வட்டுக்கோட்டையில் 3.1.2006 செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்

*வட்டுக்கோட்டை.* (44896)(18-45-12)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளவத்தையில் தமிழ் வர்த்தகர் மீது சூடு

கொழும்பு,ஜன.4

வெள்ளவத்தையில் நேற்றிரவு 10.45 மணியளவில் யாழ். பிரபல வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார்.

வெள்ளவத்தையில் உள்ள அட்லஸ் கொம்னிக்கேசன் நிறுவனத்தின் உரிமையாளரான 'அட்லஸ் பாலா' என அழைக்கப் படும் நடராசா பாலேந்திரன் (வயது - 55) என்பவரே சுடப்பட்டவராவார்.

அவர் தமது நிறுவனத்துக்கு முன்பாக நின்ற சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பி விட்டனர் என்றும் -

ஆபத்தான நிலையில் களுபோவில ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3)

# திருமலையில் நேற்றிரவு இரு குண்டுகள் வெடித்தன

திருகோணமலை,ஜன.4

திருகோணமலை நகரை அண்டிய 10 ஆம் இலக்கத் தமிழ் கிராமத்தில் நேற்றிரவு 7.45 மணியளவில் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தன. ஆனால், இக்குண்டு வெடிப்பால் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (3)

# வைத்தியசாலை முன் அநாதரவாக சாளி

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று நேற் றிரவு அநாதரவான நிலையில் காணப்பட்டது.

வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவின் பிரதான வாயிலுக்கு முன் அநாதரவாக சாளி மோட்டார் சைக்கிளினால் ஆஸ்பத்திரியில் பதற்ற நிலை காணப்பட்டது. (3-6-78)

# ஐந்து மாணவர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத் தப்பிச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனித ஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவரின் காலில் காயம் ஏற்பட்டு அவர் கீழே விழுந்தார். இவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல சக மாணவர்கள் முயன்றபோது அச்சமயம் அப் பகுதியில் நின்ற கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் ஓய்வுக்காக வந்து அமர்ந்திருந்தோர் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களைத் தாக்கி நிலத்தில் வீழ்த்தி, குண்டு வீசியவர் யாரென்று விசாரித்துள்ளனர். இது பற்றி எதுவும் தெரியாதென மாணவர்கள் கூறியபோது அதனை ஏற்காத கடற்படையினர் கீழே விழுந்து கிடந்த மாணவர்களின் நெஞ்சை தமது சப்பாத்துக்கால்களினால் மிதித்தவாறு மாணவர்களின் காதுக்கருகில் துப்பாக்கி முனையை வைத்து சுடத் தொடங்கினர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் சண்முகராஜா கஜேந்திரன் (மருத்துவ பீடத்திற்கு தெரிவானவர்), தங்கத்துரை சர்வானந்தா(மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவன்), யோகராஜா ஹேமச்சந்திர, மனோகரன் ரஜீகரன், லோகிதராஜா ரொஹான் ஆகிய ஐவருமே கொல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்களான பரராஜசிங்கம் கோகுலராஜ், யோகராஜா பூங்குழலோன் ஆகியோர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். பூங்குழலோன் நேற்று மாலையளவில் ஆபத்தான கட்டத்தில் இருந்தார். அதேவேளை, கோகுல்ராஜ் அவசர விபத்துப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார்.

கொல்லப்பட்ட மாணவர்கள் அனைவரினதும் தலையில் சூட்டுக்காயங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலைக் கிளையின் அதிகாரிகள் மாணவர்களின் சடலங்களைப் பார்வையிட்டு இதனை உறுதி செய்திருக்கின்றனர்.

**பதற்றநிலை**

தமிழர் தாயகத்தின் தலைநகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தமிழர்களுக்கு பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் செய்தி நேற்றுக்காலை ஊடகங்கள் ஊடாக வெளிவந்ததையடுத்து திருமலை நகரமே ஸ்தம்பிதமடைந்தது. மக்களின் இயல்பு வாழ்வு முற்றுமுழுதாக முடங்கியது. அரச அலுவலகங்கள், வங்கிகள், நீதிமன்றங்கள் போன்றனவும் இயங்கவில்லை.

இதற்கிடையில் கொல்லப்பட்ட மாணவர்களின் சடலங்களை பொறுப்பேற்பதாயின் அவர்கள் 'பயங்கரவாதிகள்' என்று கையொப்பமிட்டு ஏற்குமாறு பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்ட மாணவர்களின் பெற்றோரை வலியுறுத்தினர் எனவும் ஒரு செய்தி தெரிவித்தது.

ஐந்து மாணவர்களின் சடலங்களும் நேற்றுப் பிரேத பரிசோதனையின் பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டன. துப்பாக்கி மற்றும் குண்டுவெடிப்புகளினால் ஏற்பட்ட மரணங்களை பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

மாணவர்களின் இறுதிக்கிரியைகள் பெரும்பாலும் நாளை வியாழக்கிழமை திருமலையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு முன்னதாக அச்சடலங்கள் திருகோணமலையிலுள்ள பிலபலமான கல்லூரிகளுக்கு அஞ்சலி நிகழ்வுகளுக்காக எடுத்துச் செல்லப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

# நகரில் துப்பாக்கிச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக மீண்டும் பதற்றத்திற்குள்ளானது. சிறிது நேரத்திற்குள் வெறிச்சோடியது. கடைகள் மூடப்பட்டு பொதுமக்கள் சிதறி ஓடினர்.

நகரில் உள்ள கடை ஒன்றின் அருகே ஓட்டோ ஒன்றில் வந்திறங்கிய படையினரை நோக்கி இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நகரிலுள்ள 512ஆவது பிரிக்கேட் படைப் பிரிவில் கடமையாற்றும் சேனநாயக்க மற்றும் தர்மதாஸ ஆகிய இரு படையினருமே காயமடைந்தனர். அவர்களுக்கு வயிற்றிலும் நெஞ்சிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவரும் யாழ். நகரிலுள்ள இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள். தமது அலுவலகக் கடமைகளுக்காக நகருக்கு வந்து விட்டுத் தமது ஓட்டோவில் முகாமுக்குத் திரும்பும் வழியில் சுடப்பட்டனர் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதை அடுத்து படையினர் அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர். கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் துருவித் துருவிச் சோதனையிடப்படுகின்றனர்.

சம்பவத்தை அடுத்து வர்த்தகர்கள் தமது கடைகளைப் பூட்டிவிட்டுப் பறந்தனர். அன்றாடத் தேவைகளுக்காக நகருக்கு வந்திருந்தவர்கள் உயிரைக் கையில் பிடித்தபடி பதறியடித்துக்கொண்டு ஓடித்தப்பினர்.

சுமார் பதினைந்தே நிமிடங்களில் நகரம் வெறிச்சோடியது. அங்கு மயான அமைதி நிலவியது. முழு ஆயுதம் தரித்த படையினர் மட்டுமே அங்கு நின்றிருந்தனர். அதன் பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பொலீஸாரும் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அசம்பாவிதத்தை அடுத்து நகரில் பொது மக்களால் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட மூன்று மோட்டார் சைக்கிள்கள் இராணுவத்தால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதேசமயம், நகருக்கு அண்மையில் உள்ள யாழ். இந்துக் கல்லூரிப் பகுதியிலும் படையினர் நேற்றுப் பிற்பகலில் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். தொடர்ந்து காங்கேசன்துறை வீதியில் படையினர் குவிக்கப்பட்டனர்.

யாழ். இந்துக் கல்லூரிக்குள் நுழைந்து படையினர் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. மாலையில் அப்பகுதியில் சென்ற பாடசாலை மாணவர்கள் சிலரைப் பிடித்து மைதானத்தைச் சுற்றி ஓடுமாறும் படையினர் பணித்தனர். (க-3-7-12-13-15-51-139)

# கடற்படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த மாணவர்களில் பலர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றவர்களாவர். இவர்கள் அனைவரையும் நிலத்தில் படுக்கவைத்து, கடற்படையினர் அவர்களின் காதுகளில் சுட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் குழப்பமான நிலைமையொன்றை உருவாக்குவதற்காகத் திட்டமிட்டு இதனைச் செய்திருக்கின்றனர். முன்னதாக மாணவர்கள் மீது கைக்குண்டை வீசியவர்கள் கடற்படை முகாம் இருக்கும் கோட்டைப் பகுதிக்குள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த மாணவர்கள் பயங்கரவாதிகளெனவும், புலிகள் எனவும் படைத்தரப்பு கூறுகின்றது. அவர்கள் எவரும் எமது உறுப்பினர்கள் அல்லர். இந்தச் சம்பவம் அப்பட்டமான மனித உரிமை மீறல். போர் நிறுத்த ஒப்பந்தமும் மிக மோசமாக மீறப்பட்டுள்ளது. இது பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (க-3)

# ஈழத் தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யல் தலைவர்களையும் சிங்கள இராணுவம் படுகொலை செய்துள்ளது. அத்தோடு கல்லூரி மாணவி தர்சினியைச் சிங்கள கடற்படையினர் பாலியல் வல்லுறவுகொண்டு படுகொலை செய்துள்ளனர். தர்சினி படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய யாழ். பல்கலைத் துணைவேந்தர் மற்றும் மாணவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை சிங்கள இராணுவம் நடத்தியுள்ளது. இன்றைக்கும் கூட 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்படி தமிழினத்திற்கு எதிரான இராணுவ வெறியாட்டத்தை கட்டவிழ்த்துவிட்ட சிங்கள ஜனாதிபதி ராஜபக்ஷ இந்திய அரசிடம் தாம் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பவர் போன்ற தோற்றத்தை உருவாக்குவதற்கே கூட்டறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் விடுதலைப் புலிகள்தான் போர் நிறுத்தத்தை மீறிவிட்டனர் என்று கூறியிருப்பது தவறு. தொடர்ந்து ஈழ மண்ணில் சிங்கள வெறியாட்டம் தலைவிரித்து ஆடுமேயானால் தமிழக மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்த விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தயாராகும் என்று கூறினார் திருமாவளவன். (க-3)

# புலிகளின் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகாலை இழந்தவர் எனக் கூறப்படுகின்றது.

அவருடன் தேவராஜா வினோதன் மோட்டார் சைக்கிளில் கூடப் பயணித்தார்.

இதேசமயம், மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லையில் கடந்த வியாழக்கிழமையும் இதேபோன்றதாக்குதல் ஒன்று இடம் பெற்றதாகவும் -

புலிகளின் அப் பிரதேச நிதிப் பொறுப்பாளரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் அவர் தப்பிவிட்டார் எனவும் - வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-3)

# காலவரை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மாணவர்கள் சுடப்பட்டதைக் கண்டித்தும், படையினரின் அராஜகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மாவட்டத்திலிருந்து படையினரை வெளியேற்றக் கோரியும் இந்தக் கதவடைப்பு நடத்தப்படுவதாக பொங்கு தமிழ்ச் சமூகம் அறிவித்திருக்கிறது.

பதற்றமான நிலை இருப்பதால் தேவைப்படின் ஊரடங்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும் நேற்றுமாலை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. (க-3)

**கணக்கீடு**
A/L 2008
ஆரம்பம்: 07.01.2006
4.30 p.m. (N.T)
S. தவா
B.Com. (Hons)(Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
JAFFNA

ENGLISH MEDUAM
Grade - 6 - 9
கணிதம், English
விசேட வகுப்புகள்
தரம் 4 - 11 வரை
பிரிவு II ஆரம்பம்
05.01.2006 3 P.M.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.

**ஐடியல் அக்கடமி**
கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்.நகர
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.
இரு இடங்களிலும்
A/L 2008
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்: 05.01.2006
வியாழன் மாலை 4 மணி

COLLEGE OF ENGLISH
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்
இலகுவாக ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க.
SPOKEN ENGLISH
With Grammar
By: T.THANENDRAN
புதிய பிரிவுகள் 4 பிரிவுகளில்
வியா., வெள்., சனி,ஞாயி. 3.30, 4.30,5.30
O/L பரீட்சைக்குத் தோற்றியோர், தொழில் புரிவோர், வெளிநாடு செல்வோர் இணையலாம்.

நிரு
கோண்டாவில்
A/L-2008
ஜனவரி 05
மாலை 3 மணி
Acc. - திரு பாலவாசன்
Eco. - திரு மோகன்
B.st. - திரு யசோ

**கணக்கீடு**
A/L 2008
ஆரம்பம்: 07.01.2006
1.00 p.m. (N.T)
S. தவா
B.Com. (Hons)(Acc.Spl.)
SHAMROCK
ஈச்சமோட்டை யாழ்.

விக்னா கல்வி நிறுவனம்
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2008
ஆரம்பம் - நான் வகுப்பு
05.01.2006
காலை 8 மணி
எமது ஆசிரியர் விவரம் 08 ஆம் பக்கத்தில்.
(சி/47158)(12.15)

BEACON
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி)
கலைத்துறை
LOGIC - S.S. மனோகரன்
TAMIL - நா.க.தமிழிந்திரன்
H.CULTURE - ஸ்ரீஸ்
GEO - S.R. பாலா
POL.Sc. - T. றஜிதா
ECON - P. மோகன்
CHRIST - மல்லிகா
ஆரம்பம்:
07.01.2006
08 மணி

## மரண அறிவித்தல்கள்

### காந்தரூபசிங்கம் கமல்ஜித்



பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த காந்தரூபசிங்கம் கமல்ஜித் அவர்கள் நேற்று (03.01.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காந்தரூபசிங்கம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும் பஞ்சுளாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (44920)(30)

பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி கல்யாணசுந்தரக்குருக்கள் பட்டம்மாள்

நவிண்டில், சக்கலாவத்தையைச் சேர்ந்த திருமதி கல்யாண சுந்தரக் குருக்கள் பட்டம்மாள் நேற்று (03.01.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கல்யாண சுந்தரக்குருக்களின் அன்பு மனைவியும் கனகசபாபதிக்குருக்கள், பிரம்மஸ்ரீ, இராமநாதன், திருமதி ராஜாராம், திருமதி ஜானகி பரமேஸ்வரன், திருமதி மங்களா ஸ்ரீதரன் (ஆசிரியை, பரு. மெதடிஸ்த பாடசாலை), திருமதி புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரசர்மா (ஆசிரியை, பரு. செல்லையா பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கலாவத்தை, கரணவாய் வடக்கு, கரவெட்டி. (44922)(30)

தகவல்: குடும்பத்தினர்.

### அப்பையா சின்னத்தங்கம்

அரசடி வீதி, 2 ஆம் ஒழுங்கை நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அப்பையாவின் மனைவி சின்னத்தங்கம் நேற்று (03.01.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2006)புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.